[illegible]

V 3, No. 11   13 March 1930

C

V2
0M211, N28KN
M30·3·11
189085

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3.] 1930 ௵ மார்ச்சு ௴ 13௳ [No. 11.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 201
2. அப்பர் (மிருதங்கமும் தாளமும்) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 203
3. மானத சாத்திரம் (நடத்தை) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 205
4. தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது) 206
5. ஆச்சரிய சூடாமணி (மாயாசீதை அங்கம்) R. முத்தையர் 209
6. நம்மாழ்வார் வைபவம் (முதல்பத்து) K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 211
7. இலஞ்சிப் பாவை(கரிக்கோற்சின்னம் சுற்றிய கோலம்)T. S. நடராஜபிள்ளை. B A., B.L 213
8. கம்பராமாயணம் (மந்திரப் படலம்) T. N. சேஷாசலம் B. A., B. L. 214
9. வர்த்தமானம் 219

கலா நிலயம்

18985

சுயநலச் சோதனை.

6

நம்முடைய இச்சையை இடமினியதனிற் சிறிதுமில்லையெனும்படி நிறைத்துக்கொள்வதே நமது நன்மை என்பதைச் சென்றநாள் கருதினோம். எண்ணுவதையெல்லாம் நாம் இச்சிக்கக் கூடும். அவ்வெண்ணத்திற்கோ எல்லையில்லை; ஆகையால் இச்சையென்ற அச் சக்திக்கு மெல்லையில்லை. எல்லையில்லாதவொன்று எல்லையுள்ளவைகளால் நிறைவதென்பது இயலாது. இச்சை அலகிலாதது, உலகப்பொருள்கள் யாவுமோ அலகுள்ளன. எனின், இச்சையானது உலகப்பொருள்களின் முழுத்தொகுதியாலும் நிறைவடைய முடியாது. உலக அநுபவமிது; மானத சாத்திர உண்மையும் இது, தர்க்கநெறியின் முடிவும் இன்னதே. "ஆசைக்கோர் அளவில்லை அகிலமெல்லாம் கட்டியாளினும்" என்று விளம்பும் அப்பாடலில் அடங்கிய தத்துவம் இதுவன்றி வேறன்று. முடிவு பயன் நன்மை என்பன வொருபொருள் படுதலை இதன்முன் விளக்கியுள்ளோம். பிறந்தநாள் தொட்டு இச்சையால் இயங்குகின்ற வொருநிலையையே வாழ்க்கையென் றழைக்கின்றோமாதலால், வாழ்க்கையின் பயன்தான் இச்சைக்கு முடிவு என்னலாகின்றது. நிறையாவரையில் இச்சைக்கு முடிவில்லை. நிறைந்துமுடிந்த நிலை அடைந்ததும் இச்சை அடங்கிவிடுகின்றது. (இதனுண்மையை அநுபவத்தின்மூலமாய்க் காண்பது நம்மனோர்க்கு அருமையினும் அருமையாகுமெனினும் தர்க்கத்தின் முடிவு பிழைக்காதாகையால் அதனை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்). அவ்வாறு அடங்கிய நிலையைத்தான் அமைதி யென்கின்றோம். ஆதலின் அமைதியே நம் நன்மை, அதற்கு மாறாயிருப்பதெல்லாம் தீமை. இவ்வமைதியைத்தான் தாயுமானவர், "மனதற்ற பரிசுத்த நிலை" என்கின்றார். ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றி அலைவதெல்லாம், இச்சையின் இறுதி அமைதியே என்பதுணராமல் காரியங்களின் நுண்மைப் பயன்களால் வாழ்க்கையை நிறைத்துக்கொள்ள நாம் முயலுமோர் ஆகா முயற்சியின் தோற்றங்களாம். ஆகையால், இச்சைக்கு இலக்காய்நிற்கின்ற நிகிலப் பொருள்கள் அனைத்தையும்தன்னுள் அடக்கிக்கொள்ளும் மண் பொன் பெண்ணெனும் மூன்றினத்தின் முழுமையையும் ஒன்றுசேர்த்துப் பெற்றாலும் மனத்தின் இச்சை நிறைந்தடங்கு மந் நன்மை நண்ணுதென்று நவில்த லருமையோ!

எனவே, இங்கிதுகாறு முரைத்துவந்துள இலக்கணத்திற் கிணங்கிய நன்மையானது இயற்கையாய் இருக்கின்ற ஓர் நிலையேயன்றிச் செயற்கையால் சேர்க்கின்றதொன் றன்றென்பது தெருளலாகும். குறையற நிறைதலென்னும் இது புறத்தைச் சார்ந்ததாயினும் ஆகலாம், அகத்தைச் சார்ந்ததாயினும் ஆகலாம். ஆயினும், அவ்வந்தப்பொருளிற்கு இயற்கையா யிருக்க வேண்டியது இல்லாமையே குறையெனக் கூறுவதற்கொத்ததாகுமேயன்றி இன்மையெல்லாம் குறையெனற்காகாது. யானைக்குத் தோகையில்லை; மென்மயிலிற்கு யானையின் வலிமையில்லை. எனினும் யானையேனும்மயிலேனும்இவ்வின்மையால் குறையுற்றுக் கிடக்கின்றதென்று எவரும் இயம்பார். எனவே அதனைச [illegible]

இயற்கையாய நிலையிலொரு நிறைவின்றி இருந்தாலல்லாது குறைபுளதெனக் கூறல் குற்றமுடைத்து. எங்கள் குறை இவையிவையென்று எந்நாளும் முறையிட்டுநிற்போர் இவ்வாக்கியத்தி லடங்கியுள்ள கருத்தை ஆராய்ந்து உணர்வாராயின் தம் நற்கதியிற் பிழையாத நாட்ட முடையவராவார். இன்மையென்ப தொன்றையே தம் நினைவில் இறுத்தி, இது இன்மையோ இருத்தலோ இயற்கை என்பதை ஆய்ந்தோய்ந்து பாராமல் அலைவதால் விளைவது அல்லலல்லால் வேறொன்று மில்லை. தத்துவ உணர்வுடைய ராபர்ட் பிரௌனிங் என்ற ஆங்கில கவி கூறியுள்ள வண்ணம் "சேர்ப்பதெல்லாம் செம்மையே செய்யுமெனச் செப்புதற் கில்லையே."

புறத்துள பொருள்களில் ஒன்றுந் தன் உடைமையாய் இல்லாதவன் ஒருவனுமில்லை, எல்லாம் உடையவனும் இல்லை. எனின் எவ்வளவு தன் உடைமையாயின் தன்குறை நீங்கும் என்ற கணக்கை எடுத்து இயம்புவது அரிது. எனினும், ஒருவனது அமைப்பின் இயற்கைக்கு ஏற்றபடி இருக்கவேண்டியன யாவும் இருக்குமாயின், அதன்மேல் குறையென்றுகருதி விவகரிக்கின்றதெல்லாம் வீணென்பது மாத்திரமன்றி நன்மைக்கே கேடு சூழ்ந்ததுமாகும். எனின், இயற்கைக்குரியது எத்தூரம், செயற்கையாவது எத்தூரம் என வகையறுத்து உணர்வதெங்ஙனம் என வினவுமளவு இதுகாறும் நாம் உரைத்து வந்திருப்பனவற்றைத் தொடர்ந்தோதி யுணர்ந்திருப்போர்க்கு ஒன்று கூறலாம். குறையை நிறைக்கவேண்டிய பொருள், அகத்திற்கே உரியதாகவேனும் புறத்திருக்கத்தக்கன வாகவேனும் இருக்கலாமென்று சற்றுமுன் இயம்பினோ மன்றோ. அகக்குறையை அகற்றவேண்டுமென்ற கருத்தை இச்சை யென்றும், புறக்குறையைஅகற்றவேண்டுமென்ற கருத்தைஉடைமை என்றும் குறிப்பது ஒருவாறு பொருந்தும். உடைமை ஒன்று இன்மையால் இச்சைஉண்மையாக நிறையாது நிற்கின்றதெனின், அப் புறப்பொருள் இல்லாதது இயற்கைக்குறையே என்னலாம். 'உண்மையாக' என்று நாம் உரைத்ததை உன்னி உணர்தல் வேண்டும். மேன்மாட வீடில்லை, பொன்னுடையில்லை, நன்மணி அணிகலன்க ளில்லை என்னு மிவையனைய குறைகள் உடைமையைப் பற்றியவைகளே யன்றி இச்சையைச் சார்ந்தவைகளாகா. ஆகுமெனின் இவைகளைப் பெறுவதால் இச்சையும் நிறையவேண்டு மன்றோ! அவ்வாறு நிறைவதில்லை யென்பது அறியாதார் இலர். "இது பெற்றால் எனக்கினி யொருகுறையில்லை" என்று கூறும் பேதைமை, பெற்றபின் "இன்னும் பல இல்லையே" என்னுங் குறையையே பெருக்கிக் கொள்கின்றது. பெற்றதைக் கொண்டு மகிழாமல், "இதுதானே, இவ்வளவுதானே" தனக்கு இருக்கின்றதென அவை இகழவு மாகின்றன. இவை செயற்கை அவா.

இனி, மகவில்லை நண்பரில்லை இரப்போர்க் கீவதற்குப் பொருளில்லை, வெயிலிற்கு மழைக்கு மொதுங்கக் குடியில்லை என்னும் தன்மைவாய்ந்த குறைகளைச் சிறிது சோதிப்போம். மக்களின்றி வருந்துவான், மகவொன்று பெறுவானாயின், முன்னைய உதாரணங்களிற்போல், அவன் அகக்குறை மிகுவதில்லை. மகவு வேண்டுமென்ற அத் தனிஇச்சை, ஒரு பிள்ளை பெற்றதோடு நிறைந்திடினும் இடலாம். மற்று, பின்னும் இரண்டொரு பிள்ளைகள் வேண்டுமென அவன் விரும்பினும், பிறந்த இப்பிள்ளையால் விளைந்தது அன்று அவ்விருப்பம். ஒன்றே பிள்ளை இருந்தது என்னப் பெற்றதையும் இகழான். நண்பர் இல்லை என்ற குறையும் இவ்வகைத்தே. வெயிலில் திரிவான் ஒதுங்குதற்கு மரநிழல் பெற்றவுடன் அவ்விச்சை அடங்குகின்றது. நிழலை இகழான். ஈவதன்பொருட்டே பொருள் வேண்டினவனும் பெற்றவளவு கொடுத்துத் தன் அகக்குறையைக் குறைத்துக்கொள்வான். இன்னும் கொடுப்பதற்குப் பொருள் பின்னும் அவன் வேண்டினாலும், பெற்றஅளவு கொடுத்த அளவு இகழமாட்டான். இவை இயற்கைக் குறை.

இவ் வுதாரணங்களிலிருந்து செயற்கையவாவிற்கும் இயற்கைக்குறைக்கும் உள்ள வேற்றுமையை உணர்தல் அருமையன்று. எய்திய அளவு இச்சை அடங்குமெனில் அது வேண்டிநின்ற நிலை இயற்கைக் குறையென்றும், எய்தியதுகொண்டு மேலும் பெறுதற்குத் தூண்டப்பெறுவோமெனின், அதனை வேண்டிநின்ற நிலை செயற்கைஅவா வென்றுங் கொள்ளலாம். குறிப்பாகவாயினும் வெளிப்படையாகவே யாயினும் எய்தப்பெற்றதை இகழ்ந்திடாதிருத்தல் இயற்கைக் குறையின் தூண்டுதலென் றுணர்தற்கு நல்லதோர் அறிகுறி.

இவ்விஷயத்தை அறியவேண்டியது நமது வாழ்க்கை, செம்மையுறும் நெறியைத் தேர்வதற்கு மிகவும் முக்கியமாகும். இச்சையினது முடிவாய பயனை அடையமுயல்கின்றமுயற்சி பற்பலரிடைப் பல்வேறு வகைகளிற் காணப்படும். எனினும், யாவருக்கும் ஒரு போதல்லாக்கால் ஒருபோதேனும் உள்ளத்தே ஊர்கின்ற உணர்ச்சியொன்று உளது. முன் நாம் 'கல்சர்' என்னும் தலையங்கங்களில் விளக்கியிருக்கும் "சுய ஆராய்ச்சி" என்னும் இயற்கைச் சக்தியைக் கொண்டு நம்மையே சோதித்துக்கொள்வோமெனின் இது தெரியவரும். வைரமேறியேறி முற்றிமுதிர்ந்திருக்கின்ற லோகாயதர்கள்கூடப் புறக்குறைகளும் அவைகளைப் பூர்த்திசெய்யுமெனும் மயக்கத்திற் கிடனாய உடைமைக ளனைத்தும், தம்முடைய இயற்கைக்கு அயலானவைகளென்ற உணர்ச்சிக்கு ஆளாகாமலிரார். இவ்வுலகத்தின் மண் பொன் பெண் என்ற அவாவிற்குரிய பொருள்கள், தமக்கும் தம்முடைய இயற்கைஇச்சைக்கும் பலபடி தாழ்ந்தனவென்றவோருணர்ச்சியால் உலகத்தினின்று ஒதுங்கித் தாமென்ற தனிப்பெருமையிலேயே விளங்கவேண்டுமென்னும் நினைவு மிகவும் இரகசியமாய் அவர்களை உருத்திக்கொண்டிருக்கும். யாவுந்துறந்த தத்வஞர்கள் சாற்றுகின்ற "அகம் பிரம்மாஸ்மி" என்ற வாசகமே லோகாயதர் உள்ளத்திலும் மெல்லியகுரலால் நவிலலாகின்றது. இவ்வாறு நவில்கின்ற உணர்ச்சியின் வாயை ஒருநாள் ஒருமாதம் ஒருவருடம் அடைத்துவைக்கலாம்; அதனை அறவே அகற்றிவிடுவ தென்பதோ ஒருபோதும் யாவருக்கும் இயலாது. இதுதான் தெய்வ உணர்வு என்னலாம். எவ்வளவுதூரம் ஒருவன் வழிவிலகிச் சென்றாலும் மீண்டும் அவனை நன்மையின் முகமாய்த் திருப்ப நிற்பதும் இது. மாறுடமேன்மைக்கென்று புறப்பொருள்களைபற்றி யுழல்வார் முயற்சியெல்லாம் பிழைத்தபின், தீமையிலும் துன்பத்திலும் மிகமிகஆழ்ந்துவிட்ட மாந்தருக்குக் கைதந்துதவி உயர்த்துதற்குக் காத்துநிற்கும் உணர்ச்சி "தம்மின் தாழ்ந்ததும் அயலானதுமாய்க் கழிகின்ற திவ்வுலகம்" என்பதாம். அழியும்பொருள்களில் முழுவதும் மூழ்கி நாம் அழிந்தேபோகாமல் ஒருகாலத்தில் காக்கப்பெறுவோம் என்றநம்பிக்கைக்கு மாதாரம் இவ்வியற்கைக்குறையை உணர்கின்ற உணர்ச்சியே.

இவ் விடயங்களை உரைப்பதினும் உணர்ந்து கொள்வதே எளியதாகையால், அமைதியுடன் சிந்திக்கச் சிந்திக்கவே இவை விளங்கவரும் தன்மையன.

அப்பர்

8. அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்

5. நிருத்தம்

[185-வது பக்கத் தொடர்ச்சி]

(i) நிருத்தமும் அதன் ஏற்றமும்

நிருத்த மென்பது "தலைவன் இன்பம் ஏந்தி நின்றாடும்" ஒருவகை நடம் என்பர். காளிங்கன் தலையின்மீது கண்ணன் ஆடியதும், முயலகனை மிதித்துப் பரமன் ஆடுவதும் உதாரணங்களாம். அப்பர் பாடிய கோயில் பெரியதிருத்தாண்டகத்தில் இதை விளக்கும் செய்யுளுமுண்டு:—

கருமானி னுரியதளே யுடையா வீக்கிக்
கனைகழல்கள் கலந்தொலிப்ப வனல்கை யேந்தி
வருமானத் திரடோள்கண் மட்டித் தாட
வளர்மதியஞ் சடைக்கணிந்து மானேர் நோக்கி
அருமான வாண்முகத்தா ளமர்ந்து காண
வமரர்கண முடிவணங்க வாடுகின்ற
பெருமானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே !
கோயில் பெரியதிருத்தாண்டகம் 3.

இது, நூற்றெட்டுக் * கரணங்களையுடைய சொக்கமென்னும் சுத்தநிருத்த மென்பர். அவிநயம்போல் இதுவும் ஒருவகைச் சாந்திக்கூத்தாயினும், பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ் செய்தல் சொக்கமென்னும் சுத்தநிருத்தத்தில் இல்லை. மனோவாக்குக் கெட்டாத பேரின்பக் காட்சியே தரும். மற்றும் தில்லையில் அப்பர் இதை "ஒருத்தரா லறியவொண்ணாத் திரு" வெனக் குறிப்பிட்டனர்:—

கருத்தனைப்பாடமாட்டேன் காம்பனதோளிபங்கா
ஒருத்தராலறியவொண்ணாத் திருவுருவுடையசோதி
திருத்தமாந்தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற்றம்பலத்தே
நிருத்தநான்காணவேண்டி நேர்படவந்தவாறே
கோயில் - திருநேரிசை 2.

இத்தகைய நிருத்தம் திருச்சிற்றம்பலத்தில் "அதிசயம்போல நின்று அனலெரி யாடுவது" திருநாவுக்கரசுநாயனார் "செஞ்சடைக் கற்றை முற்றத் திளநிலா வெறிக்கும் சென்னி" யென்று ஆரம்பிக்கும் திருப்பதிகத்தின் பதினொரு செய்யுள்களையும் நிதானமாய் ஒவ்வொரு சொல்லையுஞ் சீர்தூக்கி வாசிக்குங்கால் செவ்வனே விளங்கும். உலகப்போக்கை அந்த நிருத்தத்தில் அப்பர் கண்டுவியப்பர்:—

விருத்தனைப்பாலனாகி விரிநிலாவெறிக்குஞ்சென்னி
நிருத்தனைநிருத்தஞ்செய்ய நீண்டபுன்சடைகடாழக்
கருத்தனார்தில்லைதன்னுட் கருதுசிற்றம்பலத்தே
அருத்தமாமேனிதன்னோ டனலெரியாடுமாறே. 9.

பாலனைவிருத்தனாகிப் பனிநிலாவெறிக்குஞ்சென்னிக்
காலனைக்காலாற்காய்ந்த கடவுளார்விடையொன்றேறி
ஞாலமாந் தில்லைதன்னு ணவின்றசிற் றம்பலத்தே
நீலஞ்சேர் கண்டனார்தா நீண்டெரி யாடுமாறே. 10.
கோயில் திருநேரிசை. பண்—கொல்லி.

இவ்வாறு உலகப்போக்குக்கு யாதொரு சம்பந்தமின்றி இன்ப ஸ்வரூபமாய் ஆடும் ஆநந்தக் களிப்பான கூத்தைத் தாண்டவ ‡மென்பர். தாண்டவம் நிருத்தம் நாட்டிய மென்பன ஒருவகைச் சாந்திக் கூத்தின் மூவகைக் கூறுபாடாம். இவை முறையே சத்துவ ராஜஸ தாமஸ குணங்களைக் காட்டும். இவற்றுள் நாட்டியமென்பது புறநடத்தை. அதை விலக்குறுப்புப் பதினாலில் வழுவாமல் அவிநயம் காட்டிப் பாவகம் தோன்ற மகளிர் ஆடுவர்.

(ii) நிருத்தமும் அதன் மரபும்

நிறுத்தக் கலையை மணிவண்ணனும், மணிகண்டனும் கைக்கொண்டனரெனின், இதுதான் உலகசிருஷ்டியினின்று நிகழ்வதெனக் கொள்ளலாகும். இக்கலை உற்சாகத்தால் வெளியாகக் கூடியதால், இதற்குக் கல்வியறிவு வேண்டியதில்லை. பண்டிதருக்கும் பாமரருக்கும் பொதுவான கலை யிதுவாகும். எனவே, யாவரும் உவக்கும் நாடகக்கலையில் இது ஒரு சார்பாய் நிகழ்த்தப்படும். நாடகங்களில் கடவுள் வழிப்பாடு செய்தபின்னர் முன்னணியாய்த் தலைக்கோலரிவை சற்று நிருத்தம் செய்தபின்னரே நாடகத்திற் செல்வள்.

நாடகவியலில் கொட்டு என்பது கூத்துவிகற்பங்களுக்கு அமைந்த வாச்சியக்கூறுகள் என்று முன்னரே கண்டோம். அவை மூவகைப்படும். கீதானுகம் நிருத்தானுகம், உபயானுகம் என்பர் சிலர். அவற்றை அடியார்க்குநல்லார் கீதாங்கம், நிருத்தாங்கம், உபயாங்க மென்பர். கீதானுகம் அல்லது கீதாங்கமென்பது கீதத்திற்காக வாசித்தல் அல்லது கொட்டுதல். மிருதங்க முதலியனவால் இக்குறிப்புக்காட்டப்படின், இசையோன் பாடுவான். நிருத்தானுகம் அல்லது நிருத்தாங்க மென்பது நிருத்தத்திற்காகக் * கொட்டுதல் அல்லது வாசித்தல். மிருதங்கவகைக் கருவி

* கரணம் என்பது படிந்து ஆடல்.

‡ உலக வழக்கில், இலட்சுமி தாண்டவம் ஆடுகிறான் என்னுஞ் சொற்றொடரைக் கவனிக்க.

* குடமுடை முழவ மார்ப்பக் கூளிகள் பாட நாளும்
நடநவி லடிகள் போலும் நாகவீச் சரவ னாரே.
திருநாகேச்சரம் - திருநேரிசை 5-வரி-3-4.

களால் இக்குறிப்புக் காட்டப்பட்டவுடனே தலைக் கோலரிவை நிருத்தம் செய்வள். நிருத்தமும் கீதமும் இரண்டும் நிகழவேண்டுமென்னும் குறிப்புக் காட்ட உபயாங்கம் அல்லது உபயானுகம் என்னும் முறையாய்க் கொட்டப்படும் இவற்றை நாம், செவ்வனே ஆடும் ஆட்டக்கச்சேரிகளில் இன்றும் காண்கின்றோம். இக்கலை இந்நாளில் நசித்துவரினும் தொன்று தொட்டுவரும் பழக்கமும் இடைவிடாது பின்பற்றி வருகின்றது.

இனி நிறுத்தாங்கம் அல்லது நிருத்தானுகத்திற்குத் தேவாரச் செய்யுள்களில் யாதேனும் காணலாமோ வெனின், பரமன் நிருத்தம் செய்விக்கப் பாணி* பாடும் பாரிடங்கள் சிலகொட்டி முழவதிர்ச்சி செய்து அவரை நிருத்தத்தில் வைப்பதுபோல் இயற்கையினும் உருவகத்திலும் மூவரும் மொழியும் பலபாசுரங்கள் உள:—

மழுவமர் செல்வனு
மாசிலாத பலபூதமுன்
முழவொலி யாழ்குழன் மோந்தை
கோட்டமுது காட்டிடைக்
கழல்வளர் கால்குஞ்சித்
தாடினனுங் கடவூர்தனுள்
விழவொலி மல்கிய
வீரட்டானத் தானல்லனே.
சம்பந்தர்.

மறையினொலி கீதமோடு பாடுவன
பூதமடி மருவி விரவார்
பறையினொலி பெருகநிகழ் நட்டமமர்
பட்டிசர மேயபடர் புன்சடையினன்
பிறையினொடு மருவியதொர் சடையினிடை
யேற்ற புனறோற்ற நிலையாம்
இறைவனடி முறைமுறையி னேத்துமவர்
தீத்தொழில்க ளில்லர் மிகவே.
ஷை.

கோட்டும்பறை சீராற் குழும வனலேந்தி
நட்டம் பயின்றாடு நல்லூர்ப் பெருமானை
முட்டின் றிருபோது முனியா தெழுந்தன்பு
பட்ட மனத்தார்க ளறியார் பாவமே.
ஷை.

நீடு காடிட மாய்நின்ற பேய்க்கணம்
கூடு பூதங் குழுமிநின் றார்க்கவே
ஆடி னாழ காகிய நான்மறை
பாடி னாரவர் பாலைத் துறையரே.
அப்பர் - திருப்பாலைத்துறை - திருக்குறுந்தொகை.

மால்யானை மத்தகத்தைக் கீண்டார் போலும்
மான்றோ லுடையா மகிழ்ந்தார் போலும்
கோலானைக் கோவழலாற் காய்ந்தார் போலும்
குழவிப்பிறை சடைமேல் வைத்தார் போலும்
காலனைக் காலாற் கடந்தார் போலும்
கயிலாயந் தம்மிடமாய்க் கொண்டார் போலு
மாலானைந் தாட லுகப்பார் போலும்
ஆக்கூரிற் றான்றோன்றி யப்பனாரே.
திருஆக்கூர்த் தான்றோன்றிமாடத் திருத்தாண்டகம் 8.

வேத மோதும் விரிசடை யண்ணலார்
பூதம் பாடநின் றாடும் புனிதனார்
ஏதம் தீர்க்கு மிடைமரு தாவென்று
பாத மேத்தப் பறையுநம் பாவமே.
—திருவிடைமருதூர் - திருக்குறுந்தொகை-9.

காத லாலே கருது தொண்டர்
காரணத்த ராகி நின்றே
பூதம் பாடப் புரிந்து நட்டம்
புவனி யேத்த வாட வல்லீர்
நீதி யாக வேழி லோசை
நித்த ராகிச் சித்தர் சூழ
வேத மோதித் திரிவ தென்னே
வேலை சூழ்வெண் காட னீரே! சுந்தரர்

தற்காலத்தில் நாடகத்திற்கு முன்னணியாய்ச் செய்யும் நிருத்தம் (Dance) யாதொரு சட்டதிட்டத்திற்கும் கட்டுப்படவில்லை. நல்லஉடையும் ஆபரணமு மணிந்து போலிவைரம் சொலிக்கச் செம்பொடி யப்பிய முகத்தைக் கொணர்ந்துகாட்டி நாடகத்தில் பாயிரம்போல் நண்ணவரும் பெண்கள் கண்டவாறு குதித்தாடுவதனையே (Dance அல்லது) நிருத்தமென்று எண்ணி, அதை நடிக்கும் அம்சங்களில் ஒன்றாக நவீன நாடகசாலைகள் கொள்கின்றன. இது மிகவும் நகைப்புக்கு இடந்தருமேயன்றி, இக்கலையைச் சிறிதும் விளக்காது குற்றவடிவாய் நிகழும். ஏனெனில், இத்தகைய குதியாட்டத்தில், அறுவகை நிலையும், ஐவகைப் பாதமும், பதினாறுவகை அங்கக்கிரியையும், வருத்தனை நான்கும், நிருத்தக்கை முப்பதும் இயங்கி விளங்கா. நிருத்தமாகுந் தொழில் மிகவும் கடினமான தொழில் என்பது மூவருக்குங் கருத்து. திருஞானசம்பந்தர் சிவபெருமானை,

நிருத்தனா றங்கன் நீற்றன்நான் மறைய
னீலமார் மிடற்ற னெற்றிக்கண்
ஒத்தன்மற் றெல்லா வுயிர்கட்கு முயிரா
யுளனிலன் கேடிலி யுமைகோன்
திருத்தமாய் நாளு மாடுநீர்ப் பொய்கை
சிறியவ ரறிவினின் மிக்க
விருத்தரை யடிவீழ்ந் திடம்புகும் வீழி
மிழலையா னெனவினை கெடுமே"
திருவீழிமிழலை. பண் - புறநீர்மை.

என்றும்

நிருத்தனார் நீள்சடை மதியொடு பாம்பணி
கருத்தனார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
அருத்தனா ரழகமர் மங்கையோர் பாகமாய்ப்
பொருத்தனார் கழலிணை போற்றுதல் பொருளதே

என்றும், சுந்தரர்

நிணம்படு முடலை நிலைமையென் றோரே
னெஞ்சமே தஞ்சமென் றிருந்தேன்
கணம்படிந் தேத்திக் கங்குலும் பகலும்
கருத்தினாற் கைதொழு தெழுவேன்
பணம்படு மரவம் பற்றிய கையர்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பிணம்படு காட்டி லாடுவ தாகி
லிவரலா தில்லையே பிரானார்

என்றும் பாடிய பாசுரங்களின் அருமையைநோக்குக. இவ்வாறே திருநாவுக்கரசரும்,

நிருத்தனை நிமலன் றன்னை நீணிலம் விண்ணின் மிக்க
விருத்தனை வேத வித்தை விளைபொருண் மூல மான
கருத்தனைக் கடல்சூழ் நாகைக் காரோணங் கோயில் [கொண்ட
ஒருத்தனை யுணர்த லானா முய்ந்தவா நெஞ்சினீரே

என்பர். திருநாகைக்காரோணம் - திருநேரிசை 3

* அட்டுமினில்பலி யென் றகங்கடை தோறும்வந்து
மட்டவிழுங்குழலார் வளைகொள்ளும் வகையென்கொலோ
கொட்டியபாணி யெடுத்திட்ட பாதமும் கோளரவும்
நட்டநின்றாடிய நாதர்நல் லூரிடங் கொண்டவரே
திருநல்லூர் - திருவிருத்தம் 1.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[189 - வது பக்கத் தொடர்ச்சி.]

189095

நடத்தை (Behaviour)

சிறப்புநிலை யுறுதலை விளக்கமாக அறிதல் வேண்டும். உணர்வுத்துறையும் இயக்கத்துறையும் என்ற இரண்டு பிரிவுகளைக் கண்டோம். சிற்சில பொருள்களையே, காட்சிப் பொருள்களாக் கண்டு இயற்கைச் செயனிலை கிளர்ச்சியுறுவதை முன்னரே கண்டோம். ஈதே உணர்வுத்துறை சிறப்புநிலை யுறுவது ஆகும். (Specificity of the Instinct on the executive side). அங்ஙனமே, குறித்தவொரு வழியாகத்தான் சில உயிருளிகள் செயலுறுகின்றன. ஈதேயாக இயக்கத்துறை சிறப்புநிலை யுறுதலாகும், (Specificity of Instinct on the Receptive side) இந்தச் சிறப்புநிலையும் படிப்படியாகப் பற்பலநிலைகளில் உயிருளிகளிடம் இருக்கக்காண்கின்றோம். உணர்வுத்துறையும் இயக்கத்துறையும்சிறப்புநிலையுற்றிருந்தால் அவ்வுயிருளியின்செயல், கருவியும் பொறியும்போல (machine) மாறுதலின்றியும் அறிவுவிளக்கமின்றியும் இயங்குகின்றது. பூச்சிகள்தான் இவ்வாறு சிறப்புநிலை பெற்று விளங்குகின்றன. விட்டிலானது புழுநிலையிலிருந்து பூச்சிநிலை யடைந்ததும் குறித்தவொரு பூவில் குறித்த ஓரிடத்தில் முட்டையிடச் செல்வதை முன்னரே கண்டோம். இவ்வாறு உணர்வுத் துறையிலும் இயக்கத் துறையிலும் இயற்கைச்செயனிலை சிறப்புநிலையுற்று விளங்கினால், அறிவின் திருவிளையாடல்களுக்கு இடமேது? முன்சொன்ன விட்டில், அந்தப் பூவைக் கண்டாலன்றி இயற்கைச்செய லுறுவதில்லை. அப்பூவே விளையாத இடத்தில் அஃது அழிந்தே போகும். இரையைத் தன் வளையின் வாயிலில் விட்டு உள் சென்று வெளிவந்தபின்னர்த்தான் அந்த இரையை வளைக்குள் கொள்ளுவது எனச் சிறப்புநிலையுற்று விளங்குகின்ற குளவியின் இரையைச் சிறிது தொலைவில் இழுத்துவிட்டால் சிறப்புநிலையை மாற்றியமைக்க முடியாது இடர்ப்பட்டதையும்கண்டோம். இங்ஙனம் சிறப்புநிலை யுறாதபோதுதான் அறிவுவிளக்கத்திற்கு இட முண்டாகின்றது இக் காட்சிப்பொருளுக்கு அடிமையாவதா, அக் காட்சிப்பொருளுக் கடிமையாவதா? இத்தொழிலைச் செய்வதா; அத்தொழிலைச் செய்வதா? இத்தகைய கேள்விபிறந்தால் அப்பொழுதே அறிவு உள்ளே நுழைந்து முடிவுகட்டும்.

சிறுபறவை, சிறகுவளர்ந்ததும் நேரே பறந்துசெல்கிறது. முதலில் சிறிது தட்டித்தவறிப் பறந்துபோகக் காண்போம். பறக்கும் அமைப்பு நன்றாக முற்றுவதற்கு முன்னரே பறக்க முயல்வதால் இவ்வாறு நேரிடுகின்றது. இன்னும் சிலநாள்வரை அதைப் பறக்கவிடாமற் காப்போமானால் பழகிய பறவை போல முதன்முதல் பறக்கும்போதே திருத்தமாகப் பறக்கக் காண்போம். நாலைந்து நாழிகைக்கு முன்னர்த்தான், முட்டையினின்றும் வெளிவந்த குஞ்சானது நிலையாகநின்று தவறிவிழாது காலால் திருத்தமாக நடக்கக்காண்கின்றோம். அங்ஙனமே புதிதாகக் குஞ்சு பொரிக்கப்பட்ட குருகும் (வாத்து) நீரில் மூழ்கி நீந்துகிறது. இச்செயலனைத்தும் சிக்கலானவை; பல தசைநார்களின் செயல்கள் ஒன்றோடொன்று இயைபுபெற்று நிகழ்வதால் ஏற்படுபவை. சிக்கலாய் இயைபுபெற்ற செயல்களாம் நடத்தல் நீந்தல் முதலியவற்றை மடக்குத்தொடர் என்பதா, இயற்கைச்செயல் என்பதா? அஞ்சி ஓடுதல் முதலிய சிக்கலான இயற்கைச் செயல்களுக்கும் நடத்தல் முதலியவற்றிற்கும் உள்ளதொடர்பு என்ன? சிக்கலான இயற்கைச்செயல்களில் நடத்தல் நீந்தல் முதலியனவும் உள்ளடங்கிக்கிடக்கக் காண்கின்றோம். நடைமுதலாகிய ஒரே வகையான இயக்கங்கள் பலவகையான இயற்கைச்செயல்களிலும் காணப்படுகின்றன. சிலர், நடை முதலியவற்றைக் கீழ்நிலை இயற்கைச்செயல்கள் என்றும், நடுங்கி ஓடுதல் முதலியன மெய்ப்பாட்டோடு நிகழ்வன ஆதலின், நடுநிலை இயற்கைச்செயல்கள் என்றும், தற்காப்பு இனவளர்ச்சி என்பனவற்றை உயர்நிலை இயற்கைச்செயல்கள் என்றும் வேறுபடுத்துவர். இப்பிரிவால் ஏற்படும் பயன் ஒன்றும் இல்லை. நடை முதலியவற்றை இயக்க அமைப்புகள் எனலாம். இவை இயற்கைச் செயல்கள் அல்ல. இயற்கைச்செயல்கள் பயன்படுத்திக் கொள்ளும் கருவிகளே இவைகள். இவ் வியக்க அமைப்பு ஒவ்வொன்றும், புலன்நரம்புகளோடும் உடற்பொறிகளோடும் தொடர்புண்டு கிடக்கின்றன. காடியைக் கண்ணுற்கண்டதும் நாம் ஓட்டம் பிடிக்கவில்லையா ? கண்ணுக்கும் நடைக்கும் உள்ள தொடர்பன்றோ ஈது. இவ்வாறே மற்றையவற்றையும் கண்டு கொள்க. எனவே, புலனரம்பையோ, உடற்பொறியையோ தூண்டினால் இவ் வியக்கஅமைப்புகள் செயலுறுகின்றன. இவ்வியக்க அமைப்பு ஒவ்வொன்றும் நரம்புக்கிளர்ச்சியின் முடிவிடமாகும். நரம்புக்கிளர்ச்சி பாயும் கடைசியான சால்வாய் இது. கிளையாறுகள் பலவும் வந்து கூடியபின் கடலைநோக்கி ஆறு ஓடுவது போலப் பல இடத்திலிருந்தும் புறப்பட நரம்புக் கிளர்ச்சி கடைசியாக உலகை நோக்கி இயக்க அமைப்புகளாகிய இவ்வாற்றின் வழியாகத்தான் ஓடுதல் வேண்டும் எனவே, பலவகையான இயற்கைச் செயனிலைகளின் கிளர்ச்சியனைத்தும் முடிந்த முடிபாக ஓடும் பொதுக்கால்வாய் இவ்வியக்க அமைப்புகளே யன்றோ ? குறித்த ஓர் இயற்கைச்செயனிலை பொதுவாகக் குறித்த ஓர் இயக்கஅமைப்பு வழியாகத்தான் கிளர்ச்சியுறுகின்றது. ஆனால் மற்றைய இயக்க அமைப்புகளிலும் இக்கிளர்ச்சி ஓடலாம் அன்றோ ? ஒரு பறவை, தன் பகையைக் கண்டதும் சண்டையிட ஓடுகிறது. பகை, நடந்துவந்தால் தானும் நடந்து சென்றுகொத்திஇறக்கையை அடித்துக்கொள்கிறது. எனவே, நடத்தல் கொத்தல் இறக்கையை அடித்துக்கொள்ளுதல் என்ற இயக்க அமைப்புகளில் கிளர்ச்சி பாய்கின்றது. ஆனால், அப்பறவையின் பகை பறந்து சென்றால், தானும் பறந்து செல்கின்றது; பகை கீழ் தங்கியதும், தானும் கீழ் இறங்கிப் பழையபடி நடந்து செல்கின்றது. இங்குப் பறத்தல் என்ற

இயற்கையமைப்பில் இக்கிளர்ச்சி முதலிற் பாய்கிறது என்பதாயிற்று. ஒரு சிறுபறவை தரையில் குந்திக் கிடக்கும்போது ஏதேனும் ஓர் ஒலிகேட்டுத் திடுக்கிட்டால், பறந்தோடுகின்றது. ஆனால், அஃதே கூட்டினருகே இருந்தால், விழிப்புநிலை அடைகின்றது. "உறகல்" என்பது போலச் சிறிது மெல்லக் கத்துகிறது; மேலும், பகை தன்னருகே வருமானால் பறந்தெழுந்து போய்விடுகிறது ஓரியற்கைச் செயனிலை இடத்திற்கும் காலத்திற்கும் தக்கவாறு பல இயக்க அமைப்புகளை (Motor-mechanisms) பயன்படுத்திக் கொள்கின்றது என்பதாயிற்று.

இவ் வியக்கஅமைப்பினை உயிருளிகள் முதன் முதல் எப்போது பயன் படுத்துகின்றன? யாதேனும் ஓர் இயற்கைச்செயனிலை கிளர்ச்சியுற்றால், அதன் கருவியாகத்தான் இவை இயக்கமுறுகின்றன. சிறு பறவை, இறக்கை முற்றியதும் முதன்முதல் பறந்து செல்வதை உற்றுநோக்கினால் என்ன காண்கின்றோம்? பறக்கவேண்டும் என்று பறப்பதில்லை. தன் தந்தையையோ தாயையோ உணவை நாடிப் பின்தொடர்கின்றபோது பறக்கக் காண்கிறோம்? உணவு நாட்டமே பறத்தலை எழுப்புகின்றது. வேறொரு பறவை தாக்கினால், அப்பறவை அதைக் கொத்துகின்றது; அல்லது அஞ்சி ஓடுகிறது. கொத்துவதும் கொத்துவதற்காகவே யன்று, உணவைத் தேடியே கொத்தத் தொடங்குகின்றது; அல்லது பகைத்தெழுந்து கொத்துகின்றது. எனவே உணவு தேடல், அஞ்சி ஓடுதல், பகைத்தெழுதல் முதலிய இயற்கைச்செயனிலைகளின் கருவியாகவே இவ் வியக்கஅமைப்புகள் தொடக்கத்திலிருந்து செயலுற்று வழங்கிவருகின்றன. இவ்வாராய்ச்சியாலும், இவ்வியக்க அமைப்புகள், இயற்கைச்செயனிலைகளின் துணைக்கருவிகள் என்ற கொள்கை வலிவடைகின்றது. ஓர் இயற்கைச் செயனிலை, பலவகையான இயக்க அமைப்புகளை இடத்திற்கும் பொழுதிற்கும் தகுந்தபடி பயன்படுத்திக்கொள்ளும் இவ்வுண்மையை மடக்குக் கொள்கையினர் எவ்வாறு கடக்கக்கூடும். நடத்தை என்பதையன்றோ இவ்வேறுபாடுகள் விளக்குகின்றன.

இயற்கைச்செயனிலை இவ்வாறு பலவகையாக வெளித்தோன்றுமானால் அதன் நோக்கத்தினை எவ்வாறு தெரிந்துகொள்வது. இயற்கைச்செயனிலையின் இயல்பினை ஓர் உயிருளியின் செயலொன்று கொண்டே துணிய இயலாது. தன்னிலையில் என்ன மாறுதலை அச்செயலால் உண்டாக்கிக் கொள்ளுகிறது என்பதனை அறிந்தபின்தான் துணிதல்கூடும். ஒரு பறவை மற்றொரு பறவையைத் தொடர்ந்து போவதைக் காண்கின்றோம். இவ்வியக்கமொன்றைமட்டும் கண்டுவைத்து, அதன் இயற்கைச்செயனிலையைப் பற்றி ஏதேனும் துணிந்து கூறக்கூடுமோ? பகைத்தெழுந்து தொடர்ந்தோடலாம். அல்லது உணவு நாடித் தன் பெற்றோரைப் பின்தொடர்ந்தோடலாம், காதலால் தொடர்ந்தோடலாம்; இவற்றில் எதனைத் துணிந்து சொல்வது? அதன் செயல்கள் அதன் நிலையில் என்ன மாறுதலை உண்டாக்குகின்றன? எந்தநிலை மாறுதல் உண்டானால், அதன் இயக்கம் முடிவடைகின்றது? என்று ஆராய்தல் வேண்டும். ஈதன்றோ நடத்தை ஆராய்ச்சி. எனவே, உயிருளியின் நோக்கத்தினையும், நிலையினையும், நிலைமாற்றத்தினையும் கொண்டு தன் இயற்கைச் செயனிலைகளின் இயல்பை அறிதல் கூடும். இவ்வாறு இந்த நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு ஆராயாமற்போனால் எச்செயலையும் இயற்கைச்செயல் என்று கொண்டு இடர்ப்படுவோம். நடை முதலியவற்றை இயற்கைச்செயல் என்று கூறுவார், இவ்வாறு இடர்ப்படுவாரே.

தமிழ்ப் பாடம் 113.

வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[192-வது பக்கத் தொடர்ச்சி.]

கிருஷ்ணன்தூதுச் சுருக்கம்.

கண்ணனுடைய கருத்தே தன் கருத்தும் என்று சகாதேவன் சொன்னவுடன், மற்றவரைப்போலல்லாமல் இவன் ஏது தந்திரமாய்ப் பதில் உரைத்தான் என வியந்த கண்ணன் அவனைத் தனித்தவோரிடத்திற்கு அழைத்துச்சென்று, அவனது திறமையைச் சோதிக்கப் புகுந்தவனாய், 'இப் பாரதயுத்தம் நடவாது யாவரும் உய்யும்படியான வோர் உபாயம் சொல்' எனக் கேட்டனன். இதற்கு உத்தரமும் அதுபற்றி நிகழ்ந்த நிகழ்ச்சியும் இனிவரும் ஏழு பாசுரங்களில் அடங்கியிருக்கின்றன. இக் காவியத்தின்சுவையிற் சிறந்ததோர் பாகங்களுள் இதுவொன்று.

நீபா ரதவமரில் யாவரையும் நீறாக்கிப்
பூபாரந் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா
கோபாலா போரேறே கோவிந்தா நீயன்றி
மாபா ரதமகற்ற மற்றார்கொல் வல்லாரே. 25

பதவுரை.

புயல்வண்ணா - மேகநிறமுடையவனே, கோபாலா - கோபாலனே, போர்ஏறே - யுத்தத்தில் ஆண் சிங்கம் போன்றவனே, கோவிந்தா - கோவிந்தனே,

நீ - நீ, பாரத அமரில் - பாரத யுத்தத்தில், யாவரையும்-எல்லாரையும், நீறு ஆக்கி-சாம்பலாக்கி, பூ - பூமியினுடைய, பாரம் - சுமையை, தீர்க்க - நீக்குவதற்கு, புரிந்தாய் - விரும்பியிருக்கின்றாய் (ஆதலால்), மா - பெரிய, பாரதம் - பாரதயுத்தத்தை, அகற்ற - தடுக்க, நீ அன்றி - உன்னைத்தவிர, மற்று ஆர்கொல் - வேறுயார்தான், வல்லார் - வல்லவராவர்.

பாராளக்கன்னனிகற்பார்த்தனைமுன்கொன்றணங்கின்
காரார் குழல்களைந்து காலிற் றளைபூட்டி
நேராகக் கைபிடித்து நின்னையுநான் கட்டுவனேல்
வாராமற் காக்கலாம் மாபாரத மென்றான். 26

பதவுரை.

கன்னன் - கர்ணன், பார் ஆள - பூமியை ஆளும் பொருட்டு, இகல் - பகைமிகுந்த, பார்த்தனை - அர்ச்சுனனை, முன்கொன்று - முதலிலே கொன்று, அணங்கின் - திரௌபதியினது, கார் ஆர் - மேகம் போன்ற, குழல் - கூந்தலை, களைந்து - அரிந்துவிட்டு, நின்னையும் - உன்னையும், காலில் தளைபூட்டி,- காலில் விலங்கிட்டு, நேராக - எதிராக, கைபிடித்து - கையையும் பிடித்து, நான் - நான், கட்டுவன் ஏல் - கட்டுவனேயானால், மா பாரதம் - பெரிய பாரத யுத்தத்தை, வாராமல் - வரவொட்டாமல், காக்கலாம்- தடுக்கலாம், என்றான் - என்றுசகாதேவன்கூறினான்.

முன்னநீ கூறியவை யெல்லா முடித்தாலும்
மென்னைநீ கட்டுமா றெவ்வா றெனமாய
னுன்னை நீதானு முணராதா யுன்வடிவந்
தன்னை நீகாட்டத் தளைந்திடுவன் யானென்றான். 27

பதவுரை.

(அவ்வாறு சகாதேவன் கூற) மாயன் - மாயனான கிருஷ்ணன், (சகாதேவனைப் பார்த்து) முன்னம்-முதலிலே, நீ - நீ, கூறியவையெல்லாம்-கர்ணனுக்குப்பட்டம் கட்டுதல் அர்ச்சுனனைக்கொல்லுதல் திரௌபதியின்கூந்தலைக் களைதல் ஆகிய இவைகளையெல்லாம், முடித்தாலும்-செய்து முடித்தாலும், என்னை-என்னை, நீ-நீ, கட்டும் ஆறு - கட்டும்வகை, எ ஆறு - எவ்வகையில் இயலும், என - என்று வினவ, (சகாதேவன்) உன்னை - உன்னை, நீதானும் - நீயே, உணராதாய் - தெரிந்துகொள்ளாதவனே, உன் - உன்னுடைய, வடிவம்தனை - நிஜஉருவத்தை, நீ காட்ட - நீ காட்டுவாயானால், யான் - நான், தளைந்திடுவன் - கட்டிவிடுவேன், என்றான் - என்று விளம்பினான்.

மாயவனு மன்பன் மனமறிவான் கட்டுகவென்
றாயவடிவு பதினா றாயிரங் கொண்டான்
தூயவனு மூலமாந் தோற்றமுணர்ந் தெவ்வுலகுந்
தாயவடி யிணைக டன்கருத்தி னாற்பிணித்தான். 28

பதவுரை.

(அது கேட்ட) மாயவனும் - கிருஷ்ணனும், அன்பன்- பக்தியிற் பெரியவனாகிய சகாதேவனது, மனம்- மனத்திட்பத்தை, அறிவான் - அறியும்பொருட்டு, கட்டுக - கட்டுவாயாக, என்று - என்று சொல்லி, ஆய - ஒன்றுபோல் ஒன்று பொருந்தியிருக்கின்ற, வடிவு - உருவங்கள், பதினாறு ஆயிரம் - பதினாறு ஆயிரம், கொண்டான் - எடுத்துக் கொண்டான்.

தூயவனும் - பரிசுத்தனான சகாதேவனும், மூலம் ஆம் - உருவங்களுக்கெல்லாம் மூலம் ஆகிய, தோற்றம் - நிஜ உருவத்தை, உணர்ந்து - தெரிந்துகொண்டு, எ உலகும் - எல்லா உலகங்களையும், தாய (மகாபலி சக்கரவர்த்தியினிடத்தில் மண் அளந்துகொள்ளும் பொழுது) தாவிய, அடியிணைகள் - இரண்டு பாதங்களையும், தன் - தன்னுடைய, கருத்தினால் - மனத்தினால், பிணித்தான் - கட்டிவிட்டான்.

நீதேவ னென்றறிந்து நெஞ்சாற் றனைக்கட்டுஞ்
சாதேவன்கண்களிக்கத் தானேயாய் முன்னின்றான்
பூதேவரும் கனகப் பூங்கா நிழல்வைகு
மாதேவருந் தேடிக் காணா மலரடியோன். 29

பதவுரை.

(இன்னபடி) நீ - நீதான், தேவன் - தேவாதிதேவன், என்று - என்று, அறிந்து - தெரிந்துகொண்டு, நெஞ்சால் - மனத்தினால், தனை - தன்னை, கட்டும் - கட்டுகின்ற, சாதேவன் - சகாதேவனது, கண்களிக்க- கண்கள் களிக்கும்படி, தானே ஆய் - தன்னுடைய நிஜ ரூபத்தோடு,

பூதேவரும் - பூமியில்வசிக்கும் தேவர்கள்எனப்படும் அந்தணர்களும், கனகம் - பொன்மயமான, பூ- அழகிய, கா - கற்பகச் சோலையின், நிழல் - நிழலில், வைகும் - வசிக்கின்ற, மா - சிறந்த, தேவரும் - விண்ணவர்களும், தேடி - மிகமிகத் தேடியும், காணா - கண்டிராத, மலர் - தாமரைமலர்போன்ற, அடியோன் - பாதங்களை உடையவனாகிய திருமால்,

முன் நின்றான் - சகாதேவனுக்கு எதிரே நின்றான்.

அன்பா லின்றென்னை யறிந்தே பிணித்தமைநன்
றென்பாதந் தன்னையினி விடுக வென்றுரைப்ப
வன்பா ரதப்போரில் வந்தடைந்தே மைவரையு
நின்பார் வையாற் காக்கவேண்டு நெடுமாலே. 30

(நின்று) அன்பால்- பக்தியினால், என்னை - என்னை, அறிந்தே - அறிந்து, இன்று - இந்நாள், பிணித்தமை- கட்டியது, நன்று - மிகவும் நன்றாக இருக்கின்றது. இனி - இனிமேல், என் பாதம்தன்னை - என்னுடைய பாதங்களை, விடுக - விட்டுவிடு, என்று - என்று,உரைப்ப - கிருஷ்ணன் சொல்ல, (சகாதேவன்)

நெடுமாலே - திருமாலே, வந்து அடைந்தேம் - வந்து உன்னைச் சரண் அடைந்திருக்கின்ற நாங்கள், ஐவரையும்-ஐந்துபேரையும், வன் - கொடிய, பாரதப் போரில் - பாரதயுத்தத்திலே, நின் - உன்னுடைய, பார்வையால் - பார்வையினால், காக்கவேண்டும் - காத்தருளவேண்டும். (என்றான்)

என்றென் றிறைஞ்சி யிருதா மரைத்தாளி
லொன்றுங் கதிர்முடியாற் கோமென் றுரைத்தருளி
யின்றிங் கிருவேமு மிப்போ துரைத்தமொழி
யொன்றும் பிறரறிய வோதா தொழிகென்றான். 30

பதவுரை

என்று என்று - எங்களைக் காக்கவேண்டுமென்று பலமுறை வேண்டி, இறைஞ்சி - வணங்கி, இரு- இரண்டு, தாமரை தாளில் - தாமரைமலர் போன்ற பாதங்களில், ஒன்றும் - பொருந்துகின்ற, கதிர் முடியாற்கு - பிரகாசம்பொருந்திய கிரீடத்தை அணிந்த சகாதேவனுக்கு, (கண்ணபிரான்) ஓம் என்று - அவ்வாறே காக்கின்றேன் என்று, உரைத்து அருளி - வாக்குக்கொடுத்து அருளி, இன்று - இன்றையதினம், இங்கு - இவ்விடத்தில், இருவேமும் - நாம் இருவரும், இப்போது - இச்சமயம், உரைத்த - பேசிக்கொண்ட, மொழிஒன்றும்- வார்த்தை ஒன்றும், பிறர் அறிய - மற்றவர் அறியும்படி, ஓதாது ஒழிக - பேசாமல் இருக்கக்கடவாய், என்றான் - என்று கூறினான்.

விரிவுரை:—இவ்வேழுபாசுரங்களின் பொருளையும் முழுதாய் மனத்திற்கொண்டு, உன்ன உன்ன உவகை பெருகும். வீமன்முதலிய ஏனையோர் அனையனாய்த் தானேயெழுந்து யாதும் இயம்பாத இச் சகாதேவனை, மிகப்புகழ்ந்து,யாது நின் கருத்தென்னக் கண்ணபிரான் கேட்டபோது, மற்றவர்போல் இவனும் மாயைப் பெருவலையில் சிக்குகின்றானோ எனச் சோதிக்க நினைத்

தான் இவனே கண்ணியிற் பிணிப்புறுது திருவுளக் கருத்தெதுவோ அதுவே தனக்குக்கருதலென்றுதப்பி விட்டதால் மாயனது தந்திரமே தோற்றுநின்றது. ஆதலின், கண்ணன் அவனைத் தனியே அழைத்துச் சென்று உண்மையில் ஓர் உபாயம் கேட்பான்போல் போலிமுகம் கோட்டிப் பாரதப்போர் பயிலாவண்ணம் உரைக்கக் கேட்டான். அந்த வஞ்சனையும், 'நீயன்றி மாபாரத மகற்ற மற்றூர்கொல் வல்லாரே' என்ற சகாதேவனது எதிர்வீச்சினுல் வீழ்ந்தது—

"கோவிந்தா, இந்தப் பாரதப் போரில் நாங்களும் அடங்க யாவரும் நீறுகிப் பூபாரம்தீரவேண்டும்என்று நீ யாவையும் இழைக்கின்றுய். ஆதலின் பாரதப் போர் நிகழாமல் சாக்கவேண்டுமெனில் நின் திருவுளக் கருத்தன்றே மாறவேண்டும்," என்பதை எடுத்துக் காட்டிக் கண்ணனது போலிக்குப்போலியாய்த் தானுமோர் உபாயம் சொல்வான்போல், "தன் பராக்கிரம மிகுதியால் ஒருவருக்கும் ஒருபோதும் அடங்கமாட்டாக் குணமுடைய கர்ணனுக்கே பட்டம்கட்டுதல் இப் பாரதப்போரைத் தடுப்பதற்கு மிகவும் அவசியமாகும். அவ்வாறின்றிக் கௌரவர் பாண்டவர் இருவரிலும் எவராளினும் மற்றவர் சும்மாவிருக்கமாட்டார். ஆனல் கர்ணனுக்கு நேர் கடும்பகை கொண்டுள அர்ச்சுனன் அன்னதற்கோ உயிருள்ளளவும் ஒருபோதும் உடன்படான். ஆதலின் இவ்வர்ச்சுனனை நாமே முதலில் கொன்றுவிடவேண்டியது இன்றியமையாததாகின்றது. இதனுலும் பாரதப்போர் நின்றதென்பதில்லை. தானுற்றபழியைத் தலைவிரி கோலமாய்ப்புலம்பி நிற்கும் அத் திரௌபதி தன்குழலை உறஉறக் காட்டி, கழறிய வஞ்சினத்தை நினைப்பு ஊட்டி ஊட்டிப் 'போரின்றி ஒழிவீராயின் பாண்டவர்காள் அன்று விரித்த அரும்கூந்தல் வல்வினையேன் என்று முடிப்பது இனி' எனப் பகைமிக மேன்மேல் தூண்டிக் கொண்டே யிருப்பாள். ஆதலின் இதனைத் தடுக்கும் வகையொன்று நாடுவான்போல், நகை செய்து, அவள் கூந்தலைக் களைந்து விட்டால் பின் எதனைக் காட்டிப் புலம்புவாள், முடிப்பதற்கு மயிரில தாகுமாதலின் வஞ்சினமும் வறிதேயாக வாயடங்கி அவள் விலகுதற்கு 'ஈதன்றி வேறோர்நெறி கண்டிலேன்' என்றனன்.

இவைமூன்றும் இயற்றிமுற்றல் அருமையென்று இயம்ப வேண்டுமோ. மற்று அவைதமை முடித்தாலும் அதனிலும் அருமையாயது வேறொன்று உளது. தற்காலம் பாரதப்போர் மூள்வதற்கு உதவியா யுள்ளவெல்லாம் தணிந்தாலும் புதியபுதிய காரணங்கள் கற்பிப்பது "கண்ணனே உனக்கு அருமையோ! நீ இத் தரைதனில் சுழல்வரும்வரையில் போரொன் றிலாது போகாது. ஆதலின் பாரதப்போர் பயிலாவண்ணம் நீ என்னை வினவிய உபாயங்களுள், உன்னை யான் கையும் தாளும் இறுகப்பிணித்து இறுத்தவேண்டியதே முதன்மையாகும், அறிதியோ" எனச் சகாதேவன் பகர்ந்தான்.

இதனிலும்தோற்றவன் மாயனே. எனவே அவன் பின்னுமோர் புணர்ப்பினுல் சகாதேவனை முதுகுகாண உன்னினன்போல், 'மைத்துன, பரிகசம் சில நீ பரக்கப் பேசுகின்றுய். ஆயினும், நின்னுல் வல்லதிது, வல்லதல்லாதது இது என ஓராவகையில், என்னையும் கட்டல், என்று கழறத் துணிந்தனை. ஆவதோ இது, இயம்புதி' என்றனன். தத்துவப் பேரறிஞன் சகாதேவனையன்றி வேறு யாவரேயாயினும் கண்ணபிரான் அறைகூவிய இதன்முன் குறையுற்றக்கழிந்திருப்பார். இவனே சிறிதுந் தாழாது செவ்விக் குரியபடி உயர்ந்தனன். "கிருஷ்ணு! நின் அறியாமை கண்டு நான் நகுகின்றேன். உன்னையே நீ உணர்ந்திலேயோ, மற்று மறந்தனையோ; அன்றெனின் இவ் வியப்புறவினு நின் வாய் வந்திராது. தேவகியின் திருவயிறு வாய்த்து, பொதுவர்குடிப் புகுந்து, துவாரகைக்கு நாதனுய் நடிக்கின்றஇம்மாமாயவேடத்தில் உன்னை ஒருவராலும் கட்டிவைக்க இயலாதென்பது உண்மையே. ஆனல் இவ்வேடமேதானே நீ, வேறிலேயோ, விளம்புவாய்! நாடகத்தில் ஒருவன் தரித்திருக்கும் வேடமே தானென்று எந்நாளும் நினைப்பானுயின் அவனிலும் நகைக்கு இலக்காய்நிற்கின்றூர் யாரே உளர். நீயும், யாருக்கும் எப்போதும் எவ்விடத்தும் கட்டுக் கடங்காக் கண்ணனென்றே உன்னைக் கருதிக்கொண்டனை போலும். உன்னிலும் உண்மையாய் உன்னையே யான் அறிவேன். அன்பர்க்கெளியனுய் அடைந்தோர்க்கு அடங்கிநிற்கும் அவ் வருள்வள்ளல் திருமால் அல்லனே நீ. இப்பொழுதும் உன் கிருஷ்ணவேஷத்தைச் சிறிது களைந்துவிட்டுத் தன்னையே தமர்க்குநல்கும் அம் மூலத்திருவுருவில் தோன்றுவாயாயின் யான் உன்னைப் பிணிக்க வல்லனே அல்லனே காண்" எனச் செப்பினுன்.

எனவே, கண்ணனது சூழ்ச்சி இங்கும்பலித்ததில்லை. சகாதேவனது மெய்யுணர்வே வாகை கொண்டது. ஆயினும் கண்ணன் இன்னும் கைபறவெய்தாது பின்னுமோர் மாயம் புரிவானுய்க் 'கட்டுக' என்று அச் சகாதேவன் வேண்டியவாறே திகிரியும் வளையும் ஏந்திய கரங்களொடு திருமாலுருவத்தில் ஒன்றில்லை, பதினுறுயிரம் கொண்டு நின்றுன். இவைகளில் மூலம் ஒன்றே, மற்றவெல்லாம் சாயைகள். ஏதென்றுதேர்ந்து இவ்விளவல் தன்னை ஈண்டுப் பிணித்தற்குஇயலுமென இம்மாயம் அவன் புரிந்தானுனும், ஒருபோதும் பிழைக்காதபோன்பேதனது துணையாய்க்கொண்டுள்ள தூயவனும் மூலமாம் தோற்றம் உணர்ந்து மாவலிபால் மூவடிமண் அளக்கப்புக்கநாள் உலகெலாம் உள்ளடி அடக்கிய அத்தாளினைத் தளராப் பிடியால் தன்னகம் நிறுத்திக்கொண்டான். வென்றிக்கு மேன்மேலும் முயன்றவிப் பண்ணவன் அன்பர்க்கே முற்றிலும் தோற்றதாய்த் தானுணர்ந்த மகிழ்ச்சியிலே மிகப் பொங்கி, முனிவரும் விண்ணவரும் மறைநான்கும் காணரிய திருவுருவைப் பக்தியில் சிறந்த சகாதேவனுக்குக் காட்சியளித்தனன்.

இப்பேறு யாரே பெற்றூர். அதுவுமன்றி "இனி என் பாதந்தனை விடுக" எனக் கண்ணனே பக்தனை வேண்டிக்கொள்ளவும் ஆயிற்று. கிடைத்த செவ்வியைக் கைகடக்கவிடுவான் சகாதேவன் அல்லன். கருத்தினுல் பிடித்தபிணியை அவிழ்த்தாலன்றி இடம்பெயர்ந்து அகல்வதற்கு அவ் வருள்வள்ளலால் ஆகாது. இதுவே சமயமென்று, 'கண்ணு! யாவரையும் நீறுக்க நினைத்திருக்கின்றுய். எங்களுக்குத் துணையென்று நீ நிற்பதெல்லாம் நின் திருவுள்ளம் நிகழ்வதற்கே. ஆயினும் நாங்கள் உன்னைச் சரண்புகுந் திருக்கின்றோம். எங்கள் ஐவரையேனும், அப் பாரதப்போரில் மாய்க்காவண்ணம் கடைக்கண் அருளவேண்டும். இவ்

வரம் நீ தருவதன்முன் அன்புத்தளையை அவிழ்த்திட மாட்டேன்' என்று இறைஞ்சினுன்.

'ஓம்' என்பதன்றி அத்திருமால் உரைக்கும் வகை வேறு யில்லையே. கட்டும் அவிழ்ந்தது. தன்னுடைய வேடத்தை மீண்டும் அவன் தரிக்கலானுன். தரித்தற்கு அறிகுரியாக, இன்று இங்கு இருவேமும் உரைத்த மொழியொன்றும் பிறரறிய ஓதாது ஒழிகவெனத் தந்திரமு மிரகசியமுந் தானே வரலாயின.

ஆதலின் பாண்டவரைக் காத்தது உதிட்டிரன் அறம் அன்று; மலைகண்ட தன்ன வீமன்தன் மறத் தண்டு மன்று; மகவான் மைந்தன் பொருவரு சிலையு மன்று; இருவர்பொருந்திறலுமன்று; பாஞ்சாலி பாக்க விட்ட குழலுமன்று; வாய்மையே நோக்கின், நெடுமால் நின்ற நிலையுமன்று; இவ்விளையோன்தன் தாய்மையிற் றளராப் பக்தியே பாண்டவரை உய்யக்கண்டது.

ஆச்சரிய சூடாமணி

[187-வது பக்கத் தொடர்ச்சி.]

3. மாயாசீதை அங்கம்

நடுவுரை.

களைத்த ஓர் இருடிகுமாரன் வருகிறுன்.

இருடிகுமாரன்:—சூரியவம்சம் நீடூழிவாழ்க; இந்த இனகுல மணியான இராமன் கரதூடணுதியரைத் தலைவராகக் கொண்ட அரக்கர்தம் படையை ஜனஸ்தானத்திலிருந்து யமஸ்தானத்திற் கிடமாற்றினதினுலன்றே என்போலியர்க்கும் இக் காட்டிடங்களிலெல்லாம் இடையூறின்றித்திரியலாயிற்று; இராமனுல் அரக்கரின் உயிர்ச்சுவை யறிந்த கூற்றத்தின் நாவானது இப்பொழுது இலங்கையையும் சுவைபார்க்கத் தொடங்கியது. (சிறிது முன்சென்று) தீர்த்தயாத்திரை செய்ததனுல் ஏற்பட்ட தளர்ச்சியை எவ்விடம் தீர்க்கலாம்—(சுற்றிப் பார்த்து) இதன் பக்கத்தில் ஆசிரமமிருக்கவேண்டும். ஏனென்றுல் மந்திரமோதிப் பரப்பிய தருப்பைகளால் இந்நதியிடை மணற்குன்றுகள் பசுமையா யிருக்கின்றன; வைகானச முனிவருடன் பழகிய பெண்கிளிகள் மரத்திலிருந்து இனிமையாகப் பேசுகின்றன; முனிவர் குமரர் ஊரை நெல் லிட்டு வளர்த்த மான்குட்டிகள்தம் தாய்களிடம் பால் குடிப்பதும் விடுத்து, புரிசடை மரவுரி மான்தோல் இவைகளிலுள்ள நம்பிக்கையால் என்னிடம் வருகின்றன. (தனக்குள்) இங்கு வேதாத்தியயனம் கேட்கவில்லையே; ஓமப்புகையுங் காணவில்லையே! ஆயினும், உள்ளேபோய்ப் பார்ப்போம். (உள்ளிடம் நுழைந்து பார்த்து) இவ் வாசிரமம் இப்பொழுது தான் அழிந்திருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது; ஏனெனில் தருப்பைப் புற்கள் பரப்பிய யாகவேதிகையிலிருந்து அவிமணம் வீசுகின்றது; பூதப்பலியிடுமிடங்களில் இன்னும் வண்டுகள் மொய்க்கின்றன; மரக்கிளைகளில் உலர்த்திய பொன்னிற மரவுரிகள் இளந்தளிர்களுக்கு மிகுந்த ஒளியினை அளிக்கலாகின்றன. ஆதலால் இங்கு எவரேனு முளரோவெனக் கூப்பிட்டுப் பார்ப்போம்; (கூப்பிடுதல்) இதோ ஓர் வழிப்போக்கன்வந்திருக்கின்றேன்; யாரையா இங்கே!

(திரைக்குள்) அதிதிக்கு இங்கு நல்வரவாகுக.

இருடிகுமாரன்.— ஒருவரு மில்லாதிருக்கவில்லை.

வழியாத்திரைக் கோரிக்கையுடன் வயதுசென்ற கிழமுனிவர் வருகின்றுர்.

கிழமுனிவர்:—இங்கு, இங்கு, அதிதிக்கு நல்வரவாகுக.

இருடிகுமாரன்:—முனிவரே இடமகன்ற இவ்வாசிரமத்தில் தாங்கள்மட்டுமே இருக்கிறதாகத் தோன்றுகின்றதே!

முனிவர்:—இது இராவணனது உறவினனுன மாரீசனுடைய ஆசிரமம்.

இருடி குமாரன்:—ஓகோ! இராமபாணத்தின் எச்சிலென்று விசுவாமித்திரகுமாரர் சொல்லக் கேட்டிருக்கிறேன்; அவன்தானே மாரீசன்!

கிழமுனி:—ஆம். இராவணனுக்குத் தங்கையாவாள் 'சூர்ப்பனகை" யென் றொருத்தி யுண்டு.

இருடி-கு:—முனிவ, தபோவனத்தில் ராமனுடைய கட்டளைப்படி திரிகின்ற இலக்குமணனுல் சூர்ப்பனகை விகாரமடைந்ததும், அதனுல் கரதூடணுதியர் வதமும், கேள்விப்பட்டிருக்கின்றேன். நான் இப்பொழுது கேள்விப்படாதது மாரீசனுடைய செய்தி மட்டுமே.

கிழமுனி:—அதனுல் வெகுண்ட இராவணன் மாரீசனுடைய ஆசிரமத்திற்கு வந்தான்.

இருடி - கு:—பிறகு, பிறகு!

கிழ முனி:—பிறகு, "நீ மானுருக் கொண்டுசென்று இராமனை மயக்கி விலக்கவேண்டும்; அப்பொழுது நான் சீதையைக் கைக்கொள்வேன்" என்று பன்முறை சொல்லி அவனை வற்புறுத்தினுன்.

இருடி - கு:—பிறகு!

கிழமுனி:—மாரீசன் இராமனுடைய பெருமையைப் பலவாறு எடுத்துக்கூறிச்சிறிதுபொழுதுவாளாவிருந்தான்.

இருடி - கு:—பிறகு?

கிழமுனி:—பிறகு, இராவணன் வெகுண்டு துண்ணெனத் தன் புருவங்களை வளைத்துச் சிரித்து முன் தன் கூர்மையினுல் ஐராவதத்தின் கொம்புகளோடு பகைகொண்ட ஒளிவீசும் வாளை உறையிலிருந்து உருவினுன்.

இருடி-கு:—அதனில் அவ்வளவு அதிசயமில்லை. பிறகு, பிறகு?

கிழமுனி:—உடனே உயிர்ப்பயத்தினுலோ, அல்லது முன்னுள்ள வைரத்தை நினைத்தோ மாரீசன் இராவணன் சொற்படி இசைந்தான்.

இருடி - கு:—குலத்திற் கேற்ற செய்கையே! ஏனெனில், கொடியோர்தம் இயற்கைக்குணம் சில காரணங்களால் மறைந்திருப்பினும், பண்படுத்தின விதையின் குணந்தான் பயனில் தெரிவதுபோல இறுதியில் வெளியாகும்.

கிழமுனி:—இராவணனுற் கெடுகெடுத்தழிக்கப்பட்டிருக்கும் இவ்விடமிருந்து முனிவரனைவரும் வெறுப்புடன் வெளியேறினர்; நான் அகல்கின்ற இவ்விரைவை நீரும் பார்க்கின்றீரே!

இருடி-கு:— எனின், இங்கிருந்து போங்கள்; நானும் போகிறேன்.

கிழ முனி:—அப்படியே, (இருவரும் போயினர்)

நடுவுரை முற்றுப்பெற்றது.

ராமனும் சீதையும் வருகிறார்கள்.

ராமன்:— (தீய நிமித்தங்கள் தெரியப்படுத்தி) பெண்ணே! இதோ இப்பொழுது என் பரதன் சிறுவனென்று நினைத்துப் பகைவர் உத்தரகோசலத்தைக் கைக்கொண்டனரோ? ஜானகி! அல்லது வருத்தமிகுதியால் என்தாயார் உயிர் வீடடைந்தனரோ? அல்லது கரனைக் கொன்றதனால் மற்ற அரக்கர் வெகுண்டு ஒருவருமறியாப் பெரு மாயை செய்கின்றனரோ! அங்கண்ணி, உனது அழகிய கூந்தலைக் கோதிமுடிக்கு மென் தினைக்கரங்களில் இடக்கரந் துடிக்கின்றதே.

சீதை:—ராஜகுமார! தீமையைத் தீர்க்க நமக்குத் தவம்தானே உளது !

மாரீசன் வருகிறான்.

மாரீசன்:—(கவலையுடன்) நல்லொழுக்கத்தைவிட்டு இத்தீச்செய்கையைச் செய்கின்றேனே ! பாவியான என் பிறப்பின் வன்மையோ அல்லது என் சுற்றத்தாரின் கூட்டுறவோ ! பலபடி யான் எண்ணுவதால் என்; நான் இவ்வுடலை இராமனென்று பெயர் கொண்ட ஆண்டகையின் அம்பிற்கு இலக்காக்கி முதலில் யமலோகஞ் சென்று அரக்கரனைவரையும் எதிர்பார்த்திருக்கிறேன். மற்று, அந்தஇராமனுடைய ஆசிரமம் எங்குகே யிருக்கலாம்; அங்குப்போய் மனைவியுடனிருக்கும் இராமன், விசித்திர மிருக வேஷத்தால் என்னை ஆசைப்படச் செய்கிறேன். (போகிறான்)

சட்டையிட்டுக்கொண்டு இலக்குமணன் வருகிறான்.

இலக்:—தீமையேபூண்டிருந்த கரதூடணதியரைக் கொன்றதால் ஜனஸ்தானத்தில் இனிக்கொடியவர்களில்லை; ஆதலால்நீவிர் நும்ஆசிரமங்களுக்கு எழுந்தருளுங்கள்'' என்று இராமன் உத்தரவுப்படி சொல்லிவிட்டு முனிவருடைய அன்பினால் கிடைத்த சட்டையை நான் காலந்தவறியும் தரித்திருக்கின்றேன். தவிர அவர்களுக்கும் அணிகலன்கள் கொடுத்திருக்கிறார்கள்; அணிந்துகொண்டிருக்கும்பொழுது பகைவர்களைத் தொட்டால் அவர்களது மாயத்தை வெளிப்படுத்தும் அற்புத குணமுள்ள மிக்க ஒளியான மணியும் கல்பதித்த அழகிய மோதிரத்தையும் வைத்துக்கொண்டிருக்கிறேன்; அண்ணனிடம் செல்வோம். (அருகிற் சென்று) ஐய ! ஜயமுண்டாக.

ராம:—(பார்த்து) ஏ! கடவுள் கிருபையால், இலக்குமணன் அனுக்கிரகம் பெற்றிருக்கின்றான்; இலக்குமண ! வணங்கவேண்டியவர்களனைவரையும் கண்டனையா !

இலக்:—தனித்தனியும் சேர்ந்தும் அவர்களைக் கண்டேன்; சொல்லியபடியும் தெரிவித்தேன்.

ராம:—மூதறிஞரான அவர்கள் என்ன உத்தரவிடுகிறார்கள்.

இலக்:—ஆண்டகாய்! கேட்டருள்க. "அரக்கரது இரத்தத் திவலைகள் விழுந்ததால் செக்கர்வானம் போல் சிவந்த கோதாவரி நீர் எமது ஒழுக்கத்திற்குத் தக்கதில்லை; மலையொத்த அவ்வரக்கர் பிணங்களால் பூமாதும் மேடுபள்ளமா யிருக்கின்றாள்; ஆதலால் நாங்கள் சிலநாள்கூட இங்கேயே இருந்து ஆசிகூறி இராமனைக் களிக்கச் செய்துகொண் டிருக்கிறோம்'' என்றே.

ராம.—முனிவர் குழுவை வற்புறுத்தலாகாது. (உட்காருகிறான்.)

இலக்:—ஐய ! அருள்புரிக !

(ஆச்சரிய சூடாமணியையும் ; மோதிரத்தையும் காட்டுகிறான்)

ராம:—(பார்த்து) ஆச்சர்யம், ஆச்சர்யம்.

சீதை:—ஆச்சர்யம்! ஆச்சர்யம்!!

ராம:—அப்பெரியோர் இதன் பயன் என்னவெனச் சொன்னார்கள்?

இலக்:-"ஒளிசூழ்ந்த இம்மணியையும் பொன்மோதிரத்தையும் அணிகின்றவர்களை மாயையுடைய அரக்கர் தொட்டால் உடனே அவர்கள் விரைவில் தம்மையறியாமலே இயற்கைத் தன்மையை அடைகின்றனர்'' என்றே கூறினர். ஐய, கருணைபுரிக! முனிவர் கட்டளையை நிராகரிக்க லாகாதன்றோ ? (மீண்டும் பக்கத்தில் காட்டுகிறான்)

ராம:—சிறந்த சுகத்தை விரும்பும் அம்முனிவர் இச்சட்டைக்கு என்ன பலன் சொல்கிறார்கள்.

இலக்.—'மரும ஸ்தானங்களில் அம்புகள் படாமற் காக்கும்' என்று.

ராம:—ஆயின், கொண்டுவா, கொடு. காரியசித்தியுள்ளது அப்பெரியோரின் அன்புக் கொடிபூத்த மலரை வாங்குகிறேன். (வாங்கிச் சூடாமணியைச் சீதையின் தலையில் வைத்து மோதிரத்தைத் தன் விரலில் இடுகிறான்)

சீதை:—(பரபரப்புடன்) அரசகுமார! இஃதென்ன மற்றோர் அதிசயம்.

ராம:—இலக்மண, பார்! இக்காட்டினுள் ஏற்படும் நிறமாறுதலைப் பார்.

இலக்:—ஐய ! பார்க்கிறேன். இஃதென்ன ! மேகத்திலிருந்து தோன்றுத மின்னொளி சூழ்ந்ததுபோல மரங்களுடைய இக்காடு விளங்குகின்றதே! எதனால் ? இது எதன் பிரகாசம், எங்கிருந்து வருகிறது. (திரைக்குள் இலைகள் ஓசை கேட்டல்—அனைவரும் பரபரப்புடன் பார்த்தல்)

ராம:—மான்விழி மங்காய்! வெள்ளிக் கால்களும், நீலக்கற்கழுத்தும், பொன்னுடலும் பொருந்தப் பெற்றுத் தன் நடையழகில் வீசும் ஒளியினால் வானத்தில் ஆச்சரியமான இந்திரவில்லை யுண்டாக்கி அருகில் உலவும் இச் சிறுமானைப் பார்.

சீதை:—நாத, பல அற்புதங்கள் காணப்படுவதால் வனவாசம் மிக்க இனிமையாகவே யிருக்கிறது.

ராம:—களிப்புடைய உனக்கு இதில் விருப்பமிருக்கிறதா?

சீதை:—எவனுடைய உத்தியானவனத்தில் இம்மான் இருக்கிறதோ அவனுக்கு வேறு செல்வங்கள் எதற்கு?

ராம:—என் எண்ணமும் அப்படியே!

சீதை:—இம் மானைப் பிடித்துத் தருவீர்களா?

ராம:—உயிருடன் பிடிக்க முடியவில்லையானல் இதன் உறுப்புகளுடன் கூடின தோலினுலாவது சிறந்த பொருள்களுண்டாக்கலாம்.

இலக்:—ஐய! இது அரக்கரின் மாயையாயிராதோ?

ராம:—இருவிதத்திலும் இதைக் குறித்து முயற்சி செய்ய வேண்டியதே ! உண்மையாயின் இவளுடைய விருப்பம் நிறைவடையட்டும் ; மாயையாயின் தெளிவாகச் சோதித்து விடவேண்டும்.

இலக்:—உத்தரவு கொடுங்கள் (போக முயல்கின்றான்)

ராம:—குமர, நில்! சீதையைக் காப்பதே உன் கடமை. அன்றியும் காடுகள்தோறும் சென்று வெகு தூரத்திலிருக்கிற முனிவர்களைக் கண்டுவந்ததனால் உன் நெற்றியில் வியர்வை இன்னு மரும்பிக்கொண்டிருக்கிறது.

இலக்:—அப்படியே, பெரியோர் பணிவிடையென்பது சொற்படி நடத்தலேயாம்.

ராம:—இதுவெகுதூரம் போவதற்குமுன் வில்லைக் கொண்டுவா !

இலக்:—உத்தரவுப்படியே (வில்லைக்கொடுக்கிறான் இராமன் வில்லை வாங்கிக்கொண்டு போனன்)

இலக் .—என் செய்வேன். இம்முயற்சி இனிது முடிவதற்கோ அன்று. இதோ இம்மான் அடிக்கடி தன் மரகதக் கழுத்தைத் திருப்புகின்றது. இளம் புல்லை மேய்வதுபோல ஓடுகிறது. மரங்களின் உச்சிவரை மேலெழுந்தும் கீழ்குதித்திறங்கியும் சுற்றித்திரிகின்றது; இராமன் வெகுண்டு வில்லை வளைக்கும் போது அவ்விடத்திலேயே மறைகின்றது. ஐயோ! அண்ணன் கண்ணுக்குத் தென்படவில்லையே!

சீதை:—ஐயோ! நாதன் கண்ணுக்குத் தெரியவில்லையே.

நம்மாழ்வார் வைபவம்.

1ம் பத்து. 2-ம் திருவாய்மொழி.

ஒன்றும்பத்து முதல்திருவாய்மொழிச் சங்கிரஹம்.

190வது பக்கத் தொடர்ச்சி.

முதல் திருவாய்மொழியின் முக்கியகருத்து யாதெனில், பகவான் ஸ்ரீயப்பதி நாராயணன் ஸ்வரூப குணவிபவங்களாலும், நித்தியவிபூதி லீலாவிபூதி என்னும்இரண்டு விபூதிகளான ஐசுவரியங்களால் ஸர்வோத்கிருஷ்டனென்றும் ஸர்வஸ்மாத்பரனென்றும், அவனது பரத்துவத்தை ஸ்தாபிப்பதாகும். அவனே எல்லாவற்றிற்கும் காரணமென்றபடியால் வியாஸபகவான் ஸூத்திரத்தில் "காரணந் தேய'' (முதல்காரணத்தை வழிபடு) என்றுகூறியபடி ஆழ்வார் இத் திருவாய்மொழியில் அவனை வழிபடும் பக்தியோகத்தைத் துவக்கிப் புத்திமதி பரமோபதேசமாய்த் திருவாய் மலர்ந்தருளுகின்றார். முதல் திருவாய்மொழியில்—அவன் அதிசய கல்லியாண குணங்கள் உடையவனென்றும், நிர்வதிக ஆனந்த சுவரூபனென்றும், அவனே திவ்யரூபத்தாலே காட்சியாலும், குணனுபவத்தாலே மனதாலும் விசேஷ ரஸ வஸ்துவாய், நித்தியர் முக்தர்களுக்கு அநுபாவிய வஸ்துவென்றும், பாதாளலோகம் கீழ்ப்பட வைகுண்டம் மேல்பட அகத்துள்ள ஸர்வ ஜகத்துமான லீலாவபூதி ஐசுவரியத்தை அவன் உடைத்தானவனென்றும், ஸமஸ்த வஸ்து சுபரூபமும் அவன் ஆதீநமென்றும், அவன் லோகத்தை ரக்ஷிக்க ஏற்பட்ட இந்திரன் அக்னி வருணன் முதலான தேவதைகளினுள்ளே அவர்களுக்கு ஆத்மாவாய் நின்று பலப்பிரதனாய் ரக்ஷிப்பதால் அவனே ஜகத்ரக்ஷகனென்றும், சேதநாசேதந ஸமஸ்த வஸ்துக்களின் பிரவர்த்தி நிவர்த்தி அவனது ஆதீனமென்றும், அவன்தான் சரீரியாய்ஜகத்தைச் சரீரமாகஉடைத்தாய் அதைநடத்துகிறானென்றும், பிரும்மருத்திரர்களுக்கு அந்தராத்மாவாய் நிற்கின்றதனால் பரமருக்கும் பரனென்றும், ஜகத்தில் ஒரு தெசையில் ஸ்தூலமாகவும் எப்போதும் ஒழிவறவும் நிற்பதால் இப்படியுள்ள ஈசுவரனை யில்லைஎன்று யுக்திக்காரர்களான சூனியவாதிகளாலும் மறுக்க வொண்ணுதபடி "ஸத்'' "அஸத்'' என்கிற பதங்களாலே அறியப்படுபவனென்றும், "அணோ ரணீயான் மஹதோ மஹீயான்'' என்று வேதம் கூறுமாப்போல் பல சூக்ஷ்மவஸ்துவிலும் சூக்ஷ்மமான அணுவாய் வியாபித்தும் பஹிர்அண்டங்களை மனிதன் தேவதைகள் போலன்றியே, தர்மபூத ஞானத்தால் மாத்திரம் அறிவதில்லாமல் சுவரூபத்தாலேயும் எக்காலத்திலும் எங்குமொக்க வியாபித்து இருக்கின்றானென்றும், யோக சிரேஷ்டரான ஆழ்வார் தாம் உள்ளபடி அறிந்ததனைப் பாடித் தமது திருவுள்ளத்தை அவனடி தொழுதெழு என்று அருளிச் செய்யலாயினர். இதினால் ஏற்பட்ட வேதாந்த கோட்பாடுகளை உணருவோம் (1)பிரமம் நிர்க்குணமன்று. "நிர்க்குணன்'' "நிர்விகாரன்'' என்று வேதவாக்கியங்களில் கூறியுள்ளது, "ஹேய'' (அதாவது "அல்ப)'' குணமில்லாதவனென்றும் குணத்தில் மாறுபாடடைந்து அழியாதவனென்றும் பொருள்கொள்ள வேணுமென்கிறது. (2) "அந்தமில் பேரின்பம்'' பகவானுடன் கூடி அநுபவித்தல் — மோக்ஷம். சிலர் "தத்துவமஸி'' நீ அது (பிரம்மம்) ஆகிறாய்'' என்கிற வாக்கிய ஞானம் மோக்ஷமென்றது, தள்ளுபடியாயிற்று. பகவானுக்கும் ஜகத்துக்கும் சரீராத்மபாவம் சொல்லுகிறபடியால் "இரண்டுமொன்று'' என்றுள்ள அத்வைதம் நிரஸ்தமாயிற்று.

இதன்மேல், இவ்வாழ்வார் முதல்திருவாய்மொழியில் பகவானைஉள்ளபடி அநுபவிக்கப்புகுந்தவர் பக்தியோகத்தைப் பிறர்க்கு உபதேசிக்க என்ன பிரமேயம் எனில், இவருக்கு அந்த ரஸாநுபவம், மீறி உள்ளடங்காமல் தன்னைப்போன்று அவனிடத்தில்சித்தத்தைச்

செலுத்தியுள்ள பக்தர்களோடு கலந்து உறவாடி அவனது குணதிசயங்களைப் பரஸ்பரம் கேட்டும் பேசியும் அநுபவிக்கவேண்டுமென்ற ஆசை தூண்ட, அத்தகையவர் உலகத்திலுள்ளவர்களிற் காணுமையாலே உலகத்தாரைத் திருத்தி அவர்களுக்குப் பக்தியோகத்தைக் கற்பித்து அவர்களைத் தன்போலாக்கிப் பரஸ்பரம் போதயந்த:''என்கிறகணக்கிலேஉறவாடஉத்தேசித்து அவர்களுக்குப்பக்தியோகத்தை இத்தசகத்தில்துவக்கி உபதேசிக்க யத்தநிக்கின்றூர் என்றசங்கதி ஸூசிதை. ஆகையால் முதல்பதிகத்துக்கு, பகவான் ஸ்ரீயப்பதியே பரம்பொருள் என்று சாதிப்பதே கருத்து.

ஒன்றும் பத்து இரண்டாம் திருப்பதிகம்

அவதாரிகை:—இப்படி முதல்திருப்பதிகத்தில் பகவானுடைய பரத்துவத்தை மொழிந்தபிறகு அவனை வசீகரிப்பதற்குப் பக்தியோகத்தைஇத்தசகத்தில் உலகருக்கு உபதேசிக்கிறூர். இப்பொருளே 2-ம் தசகத்திற்கு இலக்கு என்பதை வெகுஅழகாகத் தென்கலை பரமஆசாரியார் "மற்ற எவையும் வீடு செய்து மிக்க புகழ் நாரணன்தாள் நாடும் நலத்தாலடைய'' என்று திருவாய்மொழி நூற்றந்தாதியில் செப்பினுர்.

போதுக் குறிப்பு

இந்தப் பத்து, பிறருக்கு உபதேசிக்கிற நிலமாகையால் எளிதாயிருக்குஞ் சொற்களைக்கொண்டு பாசுரம் பாடியிருக்கிறூர். வேதாந்த அர்த்தங்கள் உரைக்குமிடத்தில் பாவங்கள் தெளியக் கூறினுலும் படிப்பவர் எளிதில் உணர்வது அரிது. உதாரணமாக இப்பதிகத்தில் முதல் பாடலும், ஐந்தாம் பாடலும் நன்முயற்சிசெய்தே கற்கக்கூடிய பாசுரங்கள்.

1-ம் பாசுரம்

வீடுமின் முற்றவும்
வீடுசெய்து உம்முயிர்
வீடுடை யானிடை
வீடிசை மினே

பொழிப்புரை:—(1) பகவான் விஷயத்தில் தவிர இதர விஷயங்களில் ஸங்கத்தைவிட்டு உங்களாத்மாவைப் பகவானுக்கு உரியதென்றும் தாஸனென்றும் சமர்ப்பியுங்கோள். (2) அப்படிச்சமர்பிக்குமிடத்தில் அதை உடையவனை எம்பெருமானிடத்தில் ஆத்மாவைஸமர்ப்பியுங்கோள். (3) ஸமர்ப்பணமாவது அவனுடைய பிரயோஜனத்திற்கும் அவனது இஷ்டப்படி விநியோகித்திற்கும் நீவிர்உரித்தென்றுமனப் பூர்ணமாய் சம்மதித்தல்.

இதர விஷயத்தில் ஆசை (ராகம்) ஒழிந்தால்தான் பகவானிடத்தில் மனம்வைக்க அது நிற்கும். ஆத்மாவின் கருவியாகிய மனதை ஒழிக்க இயலாது. அது கூடிநின்றே இலங்குமதலால் (வீடு) விட்டொழிக்க வொண்ணுததை ஒரு இடத்தில் அமைத்தல் வேண்டும். அதற்குவாய்ந்தஇடம் அதற்குஉடைமைக்காரனை பகவானேயாதலால், அவனிடத்தில் உன் ஆத்மாவின் நன்மைபொருட்டு நீ வை. எப்படி உன் (வீடுதல்) சுமையை நீக்கிக் கொள்வது என்றுல் "அவனுக்கே நான் உரிமை, அவன் பிரயோஜனத்திற்கே நான் உதவக்கடவன். அவனே என் இறை'' என்று மனதால் நிச்சயித்து, அதை அவனிடத்தே நாள்தோறும் ஊன்றிக்கிடக்கக் கற்பிப்பதாம். இந்த மனேபாவமே பக்தியோகத்து ளடங்கிய முதல் தத்துவம்.

'வீடு செய்மின்' என்றும் பாடமுண்டு. இப்படிக் கொண்டால் சொன்னதை மறுபடியும் கூறுதலாகிய" புனருக்தி' தோஷம் சம்பவிக்கும்.

2 ம் பாசுரம்:—

மின்னின் நிலையில
மன்னுயிர் ஆக்கைகள்
என்னுமிடத்து இறை
யுன்னுமின் நீரே

அவதாரிகை:-முன்பாட்டில், பகவான்தவிர்த்தமற்ற விஷயத்தில் ஆசையை ஒழி என்றூர். நெடுவருஷங்களாய்த் துய்த்துவந்த விஷய இன்பநுகர்ச்சியை விடுதல் எளிதோ !

பொழிப்புரை :—மனிதர்கள் உடல்களும், விஷய சுகந்தரும் ஏனைய வஸ்துக்களும் மின்போலத் தோன்றி மறைகின்றன என்று உணர்ந்தால் வைராக்கியம் வரும். இதை உணர ஈஷத்காலமே வேண்டுவது. மேல் கிடக்கும் பொருளை ஆராய்ந்து எடுக்க முயற்சிவேண்டா.

3-ம் பாசுர அவதாரிகை:— ஆத்மாவின் தத்துவ உணர்ச்சியைத் தடுப்பது அகங்கார மமகாரங்கள். இவைகளை வேருடன் களைந்தால் ஈசனை அடுத்தல் நிலைபெறும்.

3-ம் பாசுரம்:—

நீர் நுமதென்றிவை
வேர்முதல் மாய்த்து—இறை
சேர்மின் உயிர்க்கு அதன்
நேர் நிறை யில்லே

பொழிப்புரை:—ஆகையால் நீங்கள் என்றும், உங்களுடையதென்றும், உம்மனத்தின்கண் நடையாடும் (அகங்கார மமகாரம்) எண்ணங்களை யெல்லாம் விட்டுவிட்டு, ஈசனை ("இறையை'') ஆச்ரயிங்கோள். இதைவிட உங்கள் ஆத்மாவுக்குச்சீரியதொன்றுமில்லை என்கிறூர். நிறை - (ஆத்மாவுக்கு) பூர்த்தி. நேர் - ஹிதத்திலும் பிரியத்திலும் ஒப்பு.

4-ம் பாசுரம்:—

இல்லதும் உள்ளதும்
அல்லது அவனுரு
எல்லையில் அந்நலம்
புல்கு பற்றற்றே

அவதாரிகை:-இதரவிஷயங்களினின்றும் மனதை இழுத்துப் பகவானிடத்தில் எப்போதும் நிறுத்தி வைக்கக் கற்பித்தார். ஒருவஸ்துவைவிட்டு மற்றொரு வஸ்துவை ஏற்க, அந்த மற்றவஸ்து இன்பநுகர்ச்சிக்கு இடந்தருமோ என்ன ?

பதவுரை:—அவனுரு-பகவானது ஸ்வரூபமானது, இல்லதும் - ஸ்தூலமாயிருக்காத ஆத்மாக்களைக் காட்டிலும். உள்ளதும் - ஸதூலமாய்க்கிடக்கும் அசேதந வஸ்துக்களைக் காட்டிலும், அல்லது வேருய் விலக்ஷணமானது, எல்லையில் அந்நலம் - அந்தப் பிரஸித்தமான எல்லையில்லாத தாழ்ந்த குணங்கள் ஒட்டும் கலப்பில்லாத ஆநந்தம் ஞானம் முதலான கல்யாணகுணங்கள், பற்று - அற்பங்களாகையால், இதர விஷயங்களில் சங்கத்தை, அற்று - நசிந்து, புல்கு - அவனை ப்ரியவஸ்துவாய் அடை.

புல்கு - ஆலிங்கனம் செய், அதவாது அவன் ஆசை வைக்கத் தகுந்தவன் ஆகையால் அவனை அடைய ஆசைப்படு, என்கின்றூர்.

இலஞ்சிப் பாவை.

[195-வது பக்கத் தொடர்ச்சி]

9. கரிக்கோற் சின்னம் சுற்றிய கோலம்.

அழுதனர் சிலவர் முன்னின் ருர்த்தனர் சிலவ ரண்மித்
தொழுதனர் சிலவ ராடித் துள்ளினர் சிலவ ரள்ளி
முழுதுற விழுங்கு வார்போன் மொய்த்தனர் சிலவர் சுற்றும்
தழுவினர் சிலவர் கொண்டு சுமந்தனர் சிலவர் தாங்கி.

கம்ப ராமாயணம்.

கரிக்கோற்சின்னத்தைக் கண்டவுடன் வீரரனைவருமிலுப்பைத்தோப்பிற் கூடவேண்டுமென்று விதித்துள தன் தலைவன்கட்டளையைத் தலைமேல் கொண்ட மதனகோபாலனைப் போர்க்குரியதூதனுக்கொள்ளல் வேண்டும். அவன் ஏரியைக்கடப்பதற்கு ஏறிய படகு நீரைக்கிழித்தோடிய தோற்றம், வல்லூறு துரத்த ஓடியுய்யப் பறக்கும் புறவின் இரிதலொக்கும். படகின்பக்கல் அமர்தற்கு அவன் உள்ளங்கொள்ளவில்லை; அவன் ஏறியதுமுதல் படகின் முன்னணியிலேயே நின்று, தான் மேற்கொண்ட பணியின் மீதே கருத்தைச் செலுத்தினவனுய்த் தன்னை மறந்திருந்தான். படகு இராதகிருஷ்ணனிருந்த கரையை விட்டகலுங்காலை அவ்விடம் அதன் போங்கால் பூத்த குமிழிகள், அது அக்கரையை அணுகும்போதும் உடையாது நுரையுடன் கூடித் திரைமிசை மிதந்தனவென்றுல், படகுசெல் கதியை என்னென்றறைவது?

ஓடமும் கரைக்கொருகோ லளவி லிருந்தபோதே மதனகோபாலன் ஆவிநிலையாது இடையிட்ட நீரைத் தாவிக் குதித்தான்.

மானின் ஓட்டமும் அவன் போக்கை யொவ்வாது. மலையின்மேல் மார்பை வளைத்துச்சென்று அதன் மறுபுறம் இழிந்தவேகம் மலையின்வீ ழருவியை யொத்தது. அஞ்சத் தக்க பொய்ம் மணலையும், அழுத்திக் கொல்லும் சேற்று நிலத்தையும், அயர்வுருது எழும்பித் தாண்டியும், சிற்ருேடையைச் சூனமெனத் தாவியும், வெளிநிலத்தை உயர்ந்த பாறைமீதிருந்து தாழ்வுடைத் தரணியிற் குதித்தும், வேட்டை நாயென விரைவிற் கடந்தும் சென்றது விழிக்கொரு விழவு மாயது. நா உலர்ந்து நீர் வேட்கை மிகுந்த காலத்தும் அவன் தண்ணீர்த் துறைகளிற் றங்கவில்லை. போர்த்தூதனுய் ஊண் உறக்க மின்றி, வெருவும் விதிமுன் செல்ல, கலக்கமும் கவலையும் பின் தங்கக் காற்றெனக் கடுகினன் முடுகி.

கரிக்கோற்சின்னம் சென்ற இடங்களிலெல்லாம் குழப்பமும் ஆரவாரமும் தோன்றின. மாளிகையும் மட்குடிலும் மறங்கொள் போர்வீரரை யீன்றன. வளைந்து கீழ்நோக்கிச் செல்லும் கணவாய்களினின்றும் மீதுற் ருேளிரும் மலைக்குவடுகளி னின்றும் வலிகொள் வீரர் வெளித்தோன்றினர். 'கூடுமிடம் இலுப்பைத் தோப்பு; விரைமின் ! விரைமின்! என்று கழறிய மொழியொழிய வேறொன்றும் புகலானுய் வீரன் செல்ல, காரணமின்றிப் போர்தொடங்கிய தென்னென அயிர்த்தனர் பலரும். பரதவன் வலையை விடுத்தேக, கருநிறக் கொல்லன் உலைக்களநீங்கி உடைவாளேந்த, மகிழ்வுடன் கொழுமுனை கொண்டுழுத உழவனும் ஏங்கி முகம்மாறி ஏரினை நடுக்களத்துவிட்டு நீங்கினுன். அறுவடை செய்த ஆட்கள் அரிவாளை வயல்மீதெறிய, ஆநிரையும்அருணக்கூட்டமும் ஆயரின்றி அலைந்தன. வேட்டைவீரன் விலங்கைவிட்டகன்றனன். சூறையாடுங் காலங் கிட்டினதென்றே வீணர் பலர் களித்தனர். வாள் இடை வீக்கினர் சிலர்; சூலமேந்தினர் சிலர்; தோமரமுந்தண்டுந் தாங்கினர் பலர்; அவரவர்க் கெய்திய பல படைகளேந்தி வாய்மடித் தோடினர் பலர்.

"சீர்கெழு வேலை நிமிர்ந்தார்
தார்கெழு தானை சமைந்தார்
போர்கெழு மாலை புனைந்தார்
ஓர்கெழு வீர ருபர்ந்தார்.''

அமைதியுற்ற எரியின்பாங்கர் மலையுங்குன்றும் முனிவரென அமைதியுடனிருப்பினும், அவலக்குரலெழும் புமச் சூழலின்வாய் முழங்கிய குலமென் குயில்களின் குரல்கள் இயற்கைக்கு மாரு யொலித்தன.

மதனகோபாலன் பல ஊர்களையும் கடந்தபின் அவன் பணிக்கு எல்லையாய சிற்றூர் கிட்டியது. அவ்விட மிருந்தும் அவ்வூர்த் தலைவனை குணசேகரன் கரிக்கோலை எடுத்துச்செல்லல் வேண்டும். பசுமை நிறம்பெற்ற பழுவத்தினிடையே பாசி படர்ந்த கற்பாறைகள் தோன்றல்போல் அவ்வூர் மாடங்கள் சிறிது மறைந்தும், சிறிது வெளித்தோன்றியும் தூதன் கண்களிற் பட்டன. தன் தொழில் முற்றியதென்னக் களித்த மதனகோபாலன் கால்களும் விரைந்தோடின. நறுமணமேற்று நாற்புற மெறிக்கும் உலவை, இந்நாளவன் செவிக்குச் சுமந்து வந்ததென்? குடரொடு தொடக்கி உழப்பும் வனிதையர் விம்மும் அரந்தை அமலையே. இராதாகிருஷ்ணனோடு கூடி, அவனருகுநின்று அமர்புரி யொருவீரன் இறந்துகிடப்ப, இருள்கொண்ட அறையில் இங்குமங்கும் எரியும் இரண்டொரு விளக்குகள் புடைசூழ்ந்த அந்தகாரத்தை அதிகமாய்க் காட்ட, கணவனை யிழந்த கைம்பெண் விழிவழி யொழுகிய கண்ணீர், குணசேகரனுடலைத் தூநீராட்டிற்று. அவனது மூத்தகுமாரன் கம்பலை படர்ந்த முகத்தனுய் நிற்க, இளையானொருவன் இன்னதென் றறியாது அழுதாற்ற, கூடியபெண்டிர் ஒப்பாரி சொல்லி யழுதனர்.

மலையே நிற்றே வனமே கிற்றே
உலையா வுந்த னுயர்திரு வுயிரே!
கோடையில் வற்றிடுங் கான்யா றெனவே
பீடையு மிகுந்தெமைப் பிணிசெய் காலை
வேட்கையோ டுதவி வேண்டு மெல்வை
மீட்கை யிலாவகை மேனு டுற்றனை

நலங்கிள ரோர்மழை நனிபொழி தரவே
மலங்கிய நதியும் மகிழ்கொண் டோடும்;
உனையிழந் தழுங்கு முத்தமி தனக்கு
நினைவி லன்றி நீயெழ லுண்டோ,
முற்றிவீழ் கதிரே முழுவது மறப்பர்
அற்றமேல் மகளிர் இளைஞர்க் கழுவதோ
பழுத்துதி ரிலையே பவனனுங் கொடுபோ
மிழுக்கிலாக் காளையை இயம னெடுத்தலோ
அருணெறி நடாத்திய வரசே
திருவடி யுற்றையோ முத்திபெற் றிடவே!

மகளிர் கூடிய அறையில் தலைவனுடலைக் கருத்துடன் நோக்கியும், தலைப்பெய்த தையலார் பொருமலைக் கண்டுவியந்தும் அடங்கிய அசுழமொன்று, ஞரேலெனக் காதுகளை நெறித்து மயிர்க்கூச்செறிந்து தலைநிமிர்த்தி உறுமிய தேன்? அதிர்ந்துவரு அயலாளொருவனது காலடி அரவம் கேட்டதே! துயருழந்தோர் இல்லம் புகுந்து அல்லலுற்றோர் அவதிகண் டிரங்கி அநுதாபங் காட்ட வருவார்தம் அமைதியுற்ற நடையளவே அச்சுணங்கன் கேட்ட வொலி! விரைவோ வெருவோ கொண்டோடுவோன் காலிடைப் பிறக்குங் கவ்வையே இது. ஒன்றையும் பாராளுய் மதனகோபாலன் அவ்வறையிற் குதித்து இறந்தவ னருகடைந்து "கூடுமிடம் இலுப்பைத்தோப்பு; கரிக்கோலை நாட்டிடைச் செலுத்துக" என்றான்.

குணசேகரன் வழித்தோன்றிய மூத்த குமாரனை மணிவண்ணனும் அப்பணி தன்னதேயென்று தெரிந்தனனு யதைத் தாவிப் பற்றினன். தந்தைக்குரிய வாளைத் தன் னிடையகத்தே யிறுகக்கட்டிப் போர்க்கோலங்கொள்ளும் புதல்வனது நாட்டம், தன்னைச் சொல்லொணுத் துயரத்தோடு நோக்கு மன்னைதன் அழுங்குறு முகத்தை யுற்றது. சென்ற கை சென்றவாறே நிற்க, மேற்கொண்ட ஆடையு மங்கத்தி லுருதொழிய மகனும் அன்னையின் அருகுற் றவளை யணைத்தழுதான். வீரனுக்கு இல்வாழ்க்கைப்பட்டு வீரரைப் பயந்த பெரியாளும் மனந்தேறி "அந்தோ, நீயும்என்னை விட்டகல்கின்றனையோ! செல்லக்கடவாய் மகனே! என் மணிவயிறு வாய்த்த வயப்போர் வீரனெனக் கரிக்கோலை எடுத்துச் செல்! உனது தந்தையின் ஆண்மைக் கிழுக்குறு வண்ணம் எழுந்து நட" என்றாள். மகனும் தந்தையினுடலை வலம்வந்து, அவனது சேவடிதாழ்ந்து தன்னை யறியாது சுரக்கும் கண்ணீரைக் கையாலெறிந்து, அவலமுறும் அகந்தனை யடக்கக் கருதி நெட்டுயிர்த்து, பின் தலையை நிமிர்த்தி, நல்லிலக்கணமுடைப் பரியொன்று விரைந்தோடுந் தன்மைபோல், கரிக்கோல் கைக்கொடு குன்றும் நதியும் கடந்தோடினன்.

இரிதல் - ஓடுதல். சூணம் - மான். மறம் - வீரம். பாதவன் - செம்படவன். ஆகிரை - பசுமந்தை. அருணம் - ஆடு. பழுவம் - காடு. உலவை - காற்று. அரந்தை - துன்பம். கம்பலை - துன்பம். தலைப்பெய்த - கூடியிருந்த. பொருமல் - துக்கம். அசுழம் - நாய். கவ்வை - ஒலி. வெரு - அச்சம். வயம் - வெற்றி.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்.

1. மந்திரப் படலம்.

பிள்ளைமதி யெதுவோவெனப் பேதுறவே வைத்தாரோ.

196வது பக்கத் தொடர்ச்சி

மலடி மைந்தனென மொழிமுரண் விளையாமற் சில வாக்கியங்கள் பேசி முடிப்பதே அருமையாயிருக்கின்றது. கதையினது இயைபு வழுவாமல் காக்கவல்ல நூலாசிரியர் மிகச் சிலரே. பாத்திரங்களது இயற்கைக்கு மாறுத சொற்களும் செயல்களும் அமைக்கவல்ல ஷேக்ஸ்பியர் அனைய கவிகள் அருமையாய்ப் பாராட்டப் பெறுகின்றனர். மொழிமுரணுங் கதையிலையும் பாத்திர இயற்கையுங் காக்கலாவது சிறுசிறு நூல்களிலேயே எளியதன்றென லாகின்றதென்னின் கம்பரது நூல்போன்றவொரு காப்பியக் கடலில் இவையெலா மிறையும் பிறழாம லமைந்திருக்கக் காணுங்கால் விளையும் வியப்பிலெழு மகிழ்ச்சியி னளவினை விளம்பவேண்டுமோ.

முன்னுரைத்த முரணிற்கும் இயைபிற்கும் இயற்கைக்கும் மேலாய் நின்று காப்பியத்தின் சிறப்பினது சிரத்தினில் மகுடஞ் சூட்டுவது தத்துவ ஒற்றுமையே என்னலாம். இத்திறத்தினில் இணையற்ற பேரரசு நம் கம்பநாட்டாழ்வார். முன்னையோர் முதுநெறி தொடர்தலின்றி மன்னற மின்னதென இவர் பிறிதுரைத்தவாறெல்லாங் கண்டனம். அரசனுக்குச் சிலபோது உதவுமொரு கருவியே அறமென மற்றவர்போல் மதியாமல் முதலறத்தி லுறுதியுடன் முயல்வதொன்றே அரசனேடு யாவர்க்கும் ஒக்குமெனக் கம்பர் வாழ்க்கையின் நோக்கத்தை உயர்விற்குமேலெல்லாம் உயர்த்திவிட்டார். வேந்தனுக்குந் துறவிக்கும் வேருகா மேலறத்தின் தூய்மையாய வாய்மையிது கம்பர்பிரான் வழங்கியுள தத்துவங்களி லொன்று. மனிதர்க்கெல்லாம் பொதுவாய இவ்வறத்தின் வகைகள்தாம் மனிதர்களுக்குள்ளேயே செல்லுமேயல்லாது அருமறையுந் தெரிவரிய திருமாலைப் பிணித்துவைக்கும் ஆற்றலோ அவைகட்கில்லை என்பது கம்பரது கொள்கைகளில் மற்றென்று ஆவதை முன் (34-வது பக்கம்) இக்காண்டத்தின் காப்புச் செய்யுளினது அமைதியை ஆயுங்காலையில் அறிந்துளோம். தயரதஇராமன் திருமாலாகவே தன் கருமங்களை ஆற்றுகின்றானென்பதை மறக்கவேண்டாவென வற்புறுத்துவார் கம்பர். ஒன்றினிற் கொன்று உதவியாய்நின்று இவ்விரண்டுதத்துவக் கொள்கைகளும் எள்ளளவு மசையாது காக்கப் பெறுகின்ற மாண்பினைக் கிஷ்கிந்தா காண்டத்தில் காணலாம்.

பெற்றதாதை பூட்டிய செல்வ மாங்கே தன் தம்பி பரதனுக்குக் கொடுத்துப்போந்த இராமன், வாலியைக் கொன்று அவன் தம்பி சுக்ரீவனுக்கு ஓர் அரசு நல்குங் கருமத்தை யக் காட்டகத்தே கைக்கொண்டனன்.

கூட்டொருவரையும் வேண்டா இக்கொற்றமைந்தன், தீமையைத் தகைவதற்கோ மற்றுத் தன் சீதையை அடைவதற் குதவிவேண்டியோ சுக்ரீவனை நட்புக் கொண்டனனென்பதை இங்கு ஆராய்வது மற்றொன்றுவிரித்த லாகுமாதலின் அதனைவிடுத்து வாலியைக்கொன்ற வச்செய்கையின் நேர்மையை மட்டுமே தேர்ந்திட நினைப்போம். ஒரு வயிற்றிற் பிறந்தோர் இருவர்பொர வேறொருவன் மறைந்துநின்று 'வரிசிலை குழைய வாங்கி வாயம்பு மருமத் தெய்தல், தருமமோ பிறிதொன்றோமோ" என வினவினன் வாலி. இவ்வினவினேடு அவன் விரவி யேசிய வசைகளும் சிலவுள. இவைகளுக்கு இரகுகுலவீரர் உரைத்த எதிர்மொழி கேட்டு வாலியும் அமைதியுற்றான். கதையளவில் இவை கம்பருக்கும் வால்மீகிமுனிவருக்கும் ஒக்கும். ஆயினும் அவன் ஏவிய வசையும் எய்திய அமைதியும் எவ்வாறு அமைந்திருக்கின்றனவென இவ்விரு நூல்களையும் தனித்தனி ஆய்ந்து நோக்குங்கால் கம்பரது நூலில், அறஞ்சாய்ந்தால் வாயடங்கவேண்டிவருகின்ற நுட்பமும், இராமனது பரத்துவ தத்துவமும் நிலைநின்று விளங்கலாகின்றன.

தாளெய்த பாணத்தைத் தொடர்ந்துவந்து எதிர்நின்ற இராமனையும் இலக்குமணனையும்நோக்கி வானர வீரன் கடிந்துரைத்த சொற்களின் சாரம் வான்மீகத்தின்படி, பின்வருமாறு:—

"கீர்த்தியுங் குலமும் எழிலும் வலிவும் உடைய இராஜகுமாரராய நீவிர், விரதம் பூண்டிருந்தும் நுமக் கொருவித அபராதமும்செய்திராத அயலானுகிய என்னை எதற்காக எய்துகொன்றீர். அல்லது என்னைக் கொன்று நீங்கள் பெறக்கூடிய பொருள் ஏதேனு முளதோ. என் தோல் உரோமம் உகிர் முதலியனவும் உங்களுக்கு உபயோகப்படாவே. என் தசையும் புசிக்கத்தக்கதன்று. என் முன்னின்று போர்செய்திருப்பீராயின் உங்களை யான் எமலோகம் அனுப்பியிருப்பேன். மற்று நீங்களோ வஞ்சனையாக ஒளித்துநின்று அம்பு எய்தீர். இது ஆண்மையாமோ? நீங்கள் மகா பாபிகள். நீங்கள் தருமத்தை நிலைநிறுத்துவதாக வீண்கொடி கட்டிக்கொண்டு அதற்கு மாருய்நடந்து பாவத்தொழிலைச்செய்கிறவரென்றும், புற்களால் மூடப்பட்ட பாழுங்கிணறுபோல்வரென்றும், ஆன்மாவை அழித்துக்கொண்டவரென்றும், பரிசுத்த வேடம்பூண்டு தீச்செயல் புரிபவரென்றும், சாம்பல் மூடிய நெருப்புப்போலத் தருமப்போர்வை போர்த்துத்திரியும் கொடியவரென்றும், இதுகாறும் நான் அறிந்திலேன். என்னைக் கொன்றதற்காக நீங்கள் நரகம் புகுவீர் என்பதிற் சந்தேகமில்லை. உங்களுக்கு அறிவுதான் உண்டோ! சீதையைக் கொண்டுவா வென்று என்னிடம் உரைத்திருந்தால் ஒரு நொடியில் செய்திருக்கமாட்டேனு! வீண்பாவம் செய்தீர். குணமும்தருமமுமற்று மதங்கொண்ட இராமனே என்னைக் கொன்றாய். நீர் செய்த காரியத்திற்குத் தகுந்த சமாதானம் சொல்ல வழிதேடும்"

தன்னைக் கொன்ற தொருவகையிலும் இராமனுக்குத் தகாதென வாலி இவ்வண்ணம் இடித்துரைத்தான். "உனக்கு யான் பகைவனல்லன்; உனக்கோர் பிழை இழைத்திலன்; என்னை எதிர்நின்று பொருதுங் கொன்றிலை; மற்று என்னைக் கொன்றதால் நினக்கோர் பயனுமில்லை—அறமிலா இது புரிந்து நின் வீரமும் வரிசிலையும் கோடியவனைய்" என்று வாலி எடுத்துக்காட்டுமிவ்வுரைகள், "கோடிய வரிசிலை யிராமன்" என்று முன் கூனி கூறியவற்றை மெய்ப்படுத்துமோ வென மயக்குறுத்துகின்றன. இதற்கு இராமன் இறுத்தவிடை அடைவுள தெனின் அவன் செயல் அறமெனலாகும். இலதெனின் எஞ்சுவது வேறென்! வடமொழி முனிவரது நூலின்படி இராமன் எதிர்மொழிந்ததன் சாரம் இவ்வண்ணம் இருக்கின்றது:—

"வாலியே, நீ தர்மம் அர்த்தம் காமம் லௌகிகம் இவைகளை யறியாமல் சிறுபிள்ளைபோல் என்னை ஏசுகின்றாய். இவ்வுலகம் முழுவதும் இக்ஷ்வாகு வம்சத்திற்குரியது. அதனைப் பரதன் ஆள்கின்றான். அவன் கட்டளைப்படி நான் துஷ்டர்களைத் தண்டித்துக்கொண்டு வருகின்றேன். நீ, உன் தம்பியின் மனைவியைக்கவர்ந்துகொண்ட அதர்மத்திற்காக நான் உன்னைக்கொன்றேன்... இலக்மணனைப்போலச் சுக்ரீவனும் எனக்கு நண்பனுயினன்.... அவன் தனது மனைவியையும் நாட்டையும் தானடையவேண்டுமென்று என்னுடைய நன்மைபைநாடத்துணிந்தான். நான் அவனுக்குஅவனதுமனைவியையும் நாட்டையுமீட்டுக் கொடுப்பதாக வானரர்கள்முன் வாக்களித்தேன். நான் செய்த பிரதிக்கினையை நிறைவேற்றுதுவாளா விருப்பெனே... ...தருமசாஸ்திரத்தை அநுசரித்தே இவ்விதமான பெரிய காரணங்களால் நான் உன்னைத் தண்டித்தேன். இதைப் பற்றிமனுஎன்பவர் இரண்டுசுலோகங்கள் சொல்லியிருக்கிறார். அவை தருமசாஸ்திரம் அறிந்த யாவராலும் மிகவும் மதிக்கப்படுகின்றன. அவற்றைக்கேள்:—பாபஞ் செய்தவர்கள் -அரசனால் தண்டிக்கப்பட்டுப் பாபம்நீங்கிப் புண்ணியம்புரிந்தோரைப்போலப் புனிதராகிச் சுவர்க்கம் அடைகின்றனர். பாபம் செய்தோர் தங்களுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு அதற்குத் தக்க தண்டனையை அடைந்தாவது மன்னிக்கப்பட்டாவது அப் பாசத்திலிருந்து விடப்படுகின்றனர். உன்னைக் கொன்றதற்கு மற்றோர் காரணமுமுண்டு, அதையுஞ் சொல்கிறேன் கேள். அதைக் கேட்டபின் என்மேல் கொள்ளுங் கோபத்தை ஒழித்துவிடு. மாமிசத்தை அபேக்ஷிக்கும் மனிதர்கள் அநேக மிருகங்களை வலைகளினுலும் கயிறுகளாலும் கண்ணிகளாலும், எதிர்ப்பட்டும் மறைந்துநின்றும் பிடிக்கிறார்கள். மிருகங்களைப் பயந்தோடும்பொழுதும் நம்பி நிற்கும்பொழுதும், சண்டையிடும்பொழுதும், குத்தியும் அடித்துங் கொல்கிறார்கள். அதற்குத் தோஷம் ஒன்றுஞ் சொல்லப்படவில்லை. தருமத்தை நன்குணர்ந்த இராஜரிஷிகளும் வேட்டையாடியிருக்கிறார்கள். ஆகையால் நானுன்னைக்கொன்றேன். நீ வானர ஜாதியாதலால் நீ யென்னுடன் போர்புரிந்தாலும் புரியாவிடினும் உன்னை நான் கொல்வதில் தோஷமில்லை."

வாலியோ சிறுபிள்ளைபோல் வினவினன், மற்று இராமனது மறுமொழியோ சிறுபிள்ளைச் சொற்கள்

போன்றன ? வான்மீகத்தில் கண்டவரையில், "நீ உன் தம்பியின் மனைவி உருமை என்பவளை அபகரித்த பாவத்திற்காக உன்னைத்தண்டித்தேன்" என்று இராமன் இயம்பிய காரணம் ஒருவாறு பொருந்தலாம் - (அதுவும் பொருந்துதற்கியலாதெனக் கம்பர் காட்டுகின்ற திறத்தினைப் பின்னர்ப் பார்ப்போம்) எனினும் இராமன் தான் இப்பொழுது அரசதர்மத்தை நடத்துதற் குரியவனா யிருக்கின்றானென்பதும், அல்லது பரதன் அவனைப் பிரதிநிதியாய் நியமித்திருப்பதும் சந்தேகத்திற் கிடமானவைகளே. மறைந்து நின்று கொன்றதற்குக் காரணமாய் இராமன் வேட்டை முறையைக் காட்டியது சிறிது மமையாதென்பதைக் கம்பர் உரைப்பதற் கிருக்கின்றார். அவையிரண்டும் அமையாவெனின், சுக்ரீவனுக்கு வாக்குக் கொடுத்திருந்த காரணமும் அவ்வழியே போதல் வேண்டும். ஊரி லிருப்பவர்களையெல்லாம் கொல்கின்றேன் என்று எதிர்ப்பட்டவ ரனைவர்க்கும் வாக்குக் கொடுத்துவிட்டு அதனை நிறைவேற்றிவைப்பதைத் தர்மநியாயமாய் எடுத்துக்காட்டச் சிறுபிள்ளைகளுந் துணியமாட்டார். "காலங் கடந்ததெனினும் கொடுத்த கடனின் மூன்றளவு ஏற்ற, இவ்வேழையின் தசையை ஏன் நீ அறக்காமல் விட்டுவிட மறுக்கின்றாய், இது தகுமோ" என வினவலுற்ற யூதன் ஷைலாக் என்பான், "இவ் வணிகன் அந்தோனியோவினது உயிரைவாங்கி என் பழியைத் தீர்த்துக்கொள்ளாமல் விடுவதில்லையென நான் தெய்வ சாக்ஷியாய்ச் சத்தியஞ் செய்துகொண்டிருக்கின்றேன். சத்தியத்தை நிறைவேற்றாப் பாபத்திற்கு என் ஆன்மாவை நான், இவ்வெனிஸ்நகரெலாம் எனக்குக்கிடைப்பதாலும், ஆளாக்கமாட்டேன்" என்று இயம்பியதற்கும், இராமன் சுக்ரீவனுக்கு வானரவீரர்முன் உரைத்த வாக்கைக் காரணமாய்க் கூறியதற்கும் பேதம் யாதெனை ஐயுறவேண்டி வருகின்றது. சுக்ரீவனது மொழி கேட்டே வாலியைக் கொல்வேன் எனக் கூறுவது ஒருதலைத்தீர்ப்பா மென்பதை இராமன் அரசனாதல் மறந்திருக்கமாட்டான். அதுவுமன்றி, பாபம் செய்தவன் மன்னிக்கப்படுவதும் முறையே என்று இராமன் மேற்கோள் எடுத்துக்காட்டிய மனுவின் சுலோகமே கூறுகின்றது. அவன் தன் குற்றத்தை ஒப்புக் கொள்வதற்கேனும் தான் அவனை மன்னிக்கவேனும் இடமின்றிச் சுக்ரீவனுக்கு வாக்குக்கொடுத்த செய்தியை விளம்பாதிருப்பதே பரதனது பிரதிநிதிக்கு அழகாயிருந்திருக்கும். எனினும், ஒளிந்துபாய்ந்த அம்பிற்கு இலக்காய வாலியோ அத்தகைய காரணங்களே தக்கதென எளிதில் உடன்பட்டு,

> "புருஷோத்தம, நீர் சொல்வது யாவும் உண்மையே, அதில் சந்தேகமில்லை......நீர் சகல தர்மங்களையும் அறிந்தவர்; எப்பொழுதும் குடிகளுடைய நன்மையை நாடுபவர்; இது செய்யத்தக்கது, இது செய்யத்தகாதது என்பதைத் தெளிவா யுணர்ந்தவர். நான் தர்மமார்க்கத்தை விட்டு நீங்கிய பெரும் பாபி. அறநெறியுணர்ந்தாய், எனக்குத் தருமத்தை யுணர்த்தி என்னை நல்வழிப்படுத்திக் காப்பாற்றுவீராக"

எனப்பணிந்தனன் என்று வான்மீகிமுனிவர் சாற்றுகின்றார். வடநூன்மரபில் அரசுமுறை அமைந்தவாறு மறவேமெனின் இது வியப்பன் றென்பதைக் கம்பரது கண்கொண்டு இனிக்காணுமளவில் தெரியவரும்.

அமிர்த குண போதினி

5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனம்.

ஆங்கில ஆசான்

10-ம் பதிப்பு வெளிவந்து விட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளைவிட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவா யிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவர். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

ரூ. 500 இனம்! எப்படி ?

விபரம் தெரிய ½ அணு ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பனி,
தபாற்பெட்டி 99. சென்னை.

பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளிபநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்கள் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கப்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

உள்நாடு சந்தா	ரூபா	2 0 0
வெளிநாடு	,, ,,	2 8 0
தனிப்பிரதி விலை	அணு	0 4 0

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரைவும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1-8.

திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணு 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுத்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருத்தப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணு 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

நாஷனல் இன்ஷுயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷுயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமா யிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி
மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.

ANCIENT JAFFNA
A MOMENTOUS BOOK

BY
Mudaliar C. RASANAYAGAM, C. C. S.
With a ForeWord By
Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

MANAGER:—
KALANILAYAM,
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்ஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறப், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

காந்தியடிகளின் இறுதிக் கடிதம்

காந்தியடிகள் ராஜப்பிரதிநிதிக்கு ஆங்கில நண்பர் ஒருவர்மூலமனுப்பிய கடிதச் சுருக்கம் வருமாறு:—

"பலவருடங்களாக அஞ்சியஞ்சிக் காலங்கடத்தி வந்த சட்டமறுப்பு இயக்கத்தைத் துவக்குமுன் தங்களை அணுகி இவ்வியக்கம் நடவாது செய்வதற்கு வழியொன்று ஏற்படுமாயின் நன்றெனக்கொண்டு இதை யெழுதலானேன். உயிருள்ள வஸ்து எதற்கும் ஹிம்சை செய்யலாகாதென்னும் தீர்மானமான கொள்கையுடைய நான், எனக்குத் தீமை இழைத்தவனாயினும் மனிதனுக்கு ஹிம்சையும் இடுக்கணும் ஒருசிறிதேனும் விளைக்க நான் விரும்பமாட்டேன். இந்தியாவில் அரசுசெலுத்தும் பிரிட்டிஷ் அரசாங்கம், பெரும்சாபமேயா யிருக்கின்றதென்பது எனது முடிவான எண்ணமாயினும், எந்தவொரு ஆங்கிலேயனுக்காகட்டும், அவனுக்கு இந்நாட்டிலுள்ள நியாயமான உரிமைக்காகட்டும் எவ்விதத் தீங்கையும் நான் புரிய விரும்பாதவன். இந்தியாவில் கையாளப்பெறும் பிரிட்டிஷார் அரசியல் முறையை கடிகின்றேனாயினும், ஆங்கிலேயர்பாற் சிறிதும் எனக்குத் துவேஷம் கிடையாது. பல ஆங்கிலேயர் எனது உயரிய நண்பராவர்.

"நான் ஏன்பிரிட்டிஷார் இங்குக் கையாளும் முறையைச் சாபம் என்று கடிகின்றேன் என்பீரேல் சொல்கின்றேன், கேளுங்கள். மிதமிஞ்சிய செலவில் நடைபெறும் ராஜரீகத்தாலும, ராணுவ நிர்வாகத்தாலும், வியாபாரம் என்னும் பெயராலும், நாணயமாற்ற முறையாலும், வாயில்லாப் பூச்சிகளான பாமரர் நினைக்கவும் முடியாத வறுமையில் வீழ்த்தப்பட்டனர். பொதுவாய் இந்தியர் அனைவரையும் அடிமைகளாய்ச் செய்துவிட்டது இவ்வரசியல் முறை. இந்தியர் கதியற்ற கோழைகளாய் நிற்கின்றனர்.

நீங்கள் விடுத்த அறிக்கை, நம்பிக்கை தந்ததென ஆரம்பத்தில் மதித்தேன். சர்வகட்சி மகாநாட்டில் நன்மை ஏற்படும் என்று கருதினேன். பின்னர் நடந்த சம்பவமும், குடியேற்றநாட்டு முறையைப்பற்றி யோசிக்கவே சர்வகட்சி மாஹாநாடு ஏற்படும் என்று வாக்குறுதிதர பிரிட்டிஷ் ராஜதந்திரிகளும் தாங்களும் மறுத்தது எனது நம்பிக்கையைத் தகர்த்தன.

வேறு வழியிலாது போகவே காங்கரஸும் சுயேச்சைத் தீர்மானத்தைச் செய்துவிட்டது. தேக உழைப்பாளிகளான கோடிக்கணக்கான ஏழைகளின்நன்மைக்கென்றே சுயராஜ்யம் கேட்கின்றோம். இப்பொழுது அரசாங்கத்தின்வருவாயில் பெரும்பாகம்நிலவரிமூலம் கிடைக்கின்றது. நிலவரியோ ஏழை ஜனங்களால் தாங்குவதற்கியலாதபடி அவ்வளவு அதிகமாக விருக்கின்றது. இவ்வரி குறைக்கப்படவேண்டும். மது முதலிய லாகிரிவஸ்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானமும்ஏழைகளினிடமிருந்துபெறும் வரியேயாகும். உப்பிற்கும் வரிபோட்டிருக்கின்றீர்கள். 'இதுகொடுமையான வரி. பணக்காரர்களைவிட உப்பை ஏழைகளே உண்ணுகின்றனர்."

பிறகு, இந்தியாவின் பெயரால் இந்தியரைக் கலவாது வாங்கப்பட்ட கடனைக் காந்திஅடிகள் கண்டித்து இந்திய அரசியல் நிர்வாகத்தில் ஏற்படும் செலவு உலகத்தில் எந்த அரசாங்கத்திலும் ஏற்படுவதில்லை என்பதைப் பின்வருமாறு விளக்குகின்றார்:—

"உங்களுடைய சம்பளத்தை எடுத்துக்கொள்ளுங்கள். மாதம் ஒன்றிற்கு 21000 ரூபாய் சம்பளமாகப் பெறுகின்றீர். இங்கிலாந்தின் பிரதமமந்திரி 5000 பவுன் பெறுகின்றார். அதாவது மாதம் ஒன்றுக்கு 5400 ரூபாய் பெறுகின்றார். நாளொன்றிற்கு இந்தியரின் சராசரி வருமானமோ இரண்டு அணா; ஆங்கிலேயரின் சராசரி வருமானமோ இரண்டு ரூபாயாகும். இரண்டணாவருமானமுள்ள நாட்டில் பிரதம அதிகாரிக்குத் தினத்திற்கு 700 ரூபாய் சம்பளம். இரண்டு ரூபாய் வருமானமுள்ள நாட்டில் தினத்திற்கு 180 ரூபாய் சம்பளம். இத்தகைய செலவுமுறைகளையுடைய அரசியல் உடனே மாற்றப்படவேண்டாவா?

"ஆகவேதான் ஏழைகளின் நன்மையை நாடியும், பலாத்கார இயக்கம் அடங்கவும், சத்தியாக்கிரஹத்தை நடத்தச் சித்தமாயிருக்கின்றேன். நான் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் எதிரியல்லன். நான் 1919 வருஷம்வரை பிரிட்டிஷாருக்கு உதவிபுரிந்துள்ளேன். இப்பொழுதும் சினேகபாவத்துடன் ராஜிபேச அவகாசம் ஏற்படுமேல் சந்தோஷம். இல்லையேல் நான் சத்தியாக்கிரஹம் துவக்கவேண்டியதுதான். உப்புவரி மிகவும் அநீதமான வரியானதினால் நான் இப்பொழுது எனது சகாக்களுடன் உப்புச்சட்டத்தை மறுக்க ஏற்பாடு செய்துவருகின்றேன்."

பிறகுஇக்கடிதத்தில் உப்புச்சத்தியாக்கிரஹ முறையை விளக்கி இத்தகையதொன்றும் நடவாது ராஜப்பிரதிநிதி செய்யின் நலம் என்றும்,இல்லையேல் தமது கடமையைச் செய்து தீரவேண்டிய அவசியத்தையும் எடுத்துக் கூறியுள்ளார்.

காந்தியடிகளின் கடிதத்திற்குப்பதிலாக ராஜப்பிரதிநிதியின் காரியதரிசி விடுத்த கடிதம் வருமாறு:—

"உங்களது மார்ச்சுமாதம் 2ந்தேதியிட்ட கடிதம் வந்ததைத்தங்களுக்கு அறிவிக்குமாறு ராஜப்பிரதிநிதி கூறினார் அதனால், பொது ஜனநலத்திற்கு ஆபத்தையும் சட்டவிரோதமான காரியங்களையும் விளைவிக்கும் முறையை நீங்கள் கையாளப்போவதென்பதைஉங்கள் கடிதம் மூலம் அறிய ராஜப்பிரதிநிதி வருந்துகின்றார்.

***

வல்லபாய் பட்டேல் தண்டனையடைந்தார்: —குஜரத்திலுள்ள போர்ஸத்துத் தாலுக்காவில் பிரசங்கம் செய்ய வல்லபாய் பட்டேல் சென்றவாரம் சென்றிருந்தார். அக்கூட்டத்தில் பிரசங்கம் செய்யலாகாதென ஜில்லா மாஜிஸ்டிரேட் பிறப்பித்த உத்திரவை ஸ்ரீ பட்டேல் மீறினார். இக்குற்றத்திற்கு அவரை மாஜிஸ்திரேட் மூன்று மாதக் காவல் தண்டனையும், ரூ.500 அபராதமும், அபராதம்கொடுக்கத் தவறினால் மூன்றுவாரக் காவல்தண்டனையும் விதித்தார். தண்டிக்கப்பட்ட இரவே ஸ்ரீபட்டேலைச் சபர்மதிச் சிறைக்கு மோட்டாரில் அழைத்துச் சென்றனர். பட்டேல் தண்டிக்கப்பட்டதால் காந்தியடிகளின் சத்தியாக்கிரஹ இயக்கம் சீக்கிரம்துவக்கப்படும் என்று தெரிகின்றது.

18909

***

'பித்தன்':—மைலாப்பூர் வனமலர்ச் சங்கத்தினரால் வெளியிடப்படும் 'பித்தன்' என்னும் மாதசஞ்சிகையின் இரண்டாமாண்டு இதழ்கள் மூன்று வரப்பெற்றோம். கிராமப்புனர் உத்தாரணம், சமூகத்திருத்தம், பொருளாதார முன்னேற்றம் ஆய நோக்கங்களை இப்பத்திரிகைகொண்டதெனத் தெரிகின்றது. கிராம முன்னேற்றத்தின்பொருட்டு வனமலர்ச் சபையினர் செய்துவரும் வேலையைப்பற்றிய வியாசம் ஒன்றும், சிறு கதைகளும் ஜீவிய சரிதங்களும் இவ்விதழ்களில் வருகின்றன. காலஞ்சென்ற வ.வெ.சு ஐயர் அவர்கள் எழுதிய பெண்கல்வியைப்பற்றிய வியாசமும், தென்னாட்டுக் கவி சுப்பிரமணிய பாரதியார் எழுதிய ஆரிய சம்பத்து என்னும் வியாசமும் இதில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவ்வகைப் பத்திரிகைகளில் இது தலைசிறந்ததென்பதில் ஐயம் சிறிதும் இல்லை. பத்திரிகையின் உருவம் அடக்கமானது. நல்ல காகிதத்தில் அச்சிடப்பெற்றுளது. உள்நாடு வருட சந்தா ரூ. 1-0-0, வெளிநாடு 1--4--0. வேண்டுவோர் 49, பஸார்தெரு, மைலாப்பூர் சென்னை, என்ற விலாசத்திற்கு எழுதிப் பெறலாம்.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

OUR OWN PUBLICATIONS

THE ARAVIDU DYNASTY OF VIJAYANAGARA Vol. 1. 1542-1614

by THE REV. HENRY HERAS, S.J., M.A., Professor, Indian History, St. Xavier's. College, Bombay, with a preface by SIR RICHARD CARNAC TEMPLE, BT. **Rs. 10**

The History of the Aravidu Dynasty of Vijayanagara could properly be entitled 'The Forgotten Dynasty of the old Forgotten Empire'. Mr. Robert Sewell devoted three chapters to the history of this dynasty and Fr. Heras promises three big volumes of which this is the first. From the time of Mr. Sewell's publication it has often been repeated that the Empire of Vijayanara met its end on the field of Talikota, in 1565. The present work discloses that the Empire continued in its splendour for several years. The author shows moreover that this period marked the climax of the Telugu domination over the most southern part of the peninsula of India.

THE LAW AND THEORY OF RAILWAY FREIGHT RATES

by K. C. SRINIVASAN, M.A., F.C.S. **Rs. 10**

THE POLITICAL PHILOSOPHIES SINCE 1905

by POF. BENOY KUMAR-SARKAR, M.A. **Rs. 4**

ECONOMIC DEVELOPMENT :

Snap-shots of World movements in Commerce, Economic Legislation, Industrialism and Technical Education *by* PROF. BENOY KUMAR SARKAR. Recommended by the Calcutta University for M.A. in commerce and in Allahabad University as a Reference book. **Rs. 8.**

LIFE OF BARRISTER SAVARKAR

by CHITRA GUPTA. The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party, he led the movement in India and in England, how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Rs. 1.8**

HINDU-PAD-PADASHAHI :

or a Critical Review of the Hindu Empire of Maharashtra *by* VINAYAK DAMODAR SAVARKAR. with an introduction by Dr. R. C. MAZUMDAR. M.A., Ph. D., Dacca. **Rs. 3**

ENGLAND'S EDUCATIONAL POLICY IN INDIA

by V. V. OAK B.A., S. T. C. Pp. 1 to 24x168. This book deals about the educational policy pursued by the Government of India during the last 100 years in which Mr V. V. Oak, has attempted to draw a realistic picture of the educational position in India as compared with the other civilised countries, by means of graphical illustrations and tabular statements. **Rs. 2**

LOK. TILAK'S GITHA RAHASYA or THE PHILOSOPHY OF ACTION

by MANGALVEDKAR, *3rd revised edn.* **Rs. 2**

DIALOGUE DIVINE AND DRAMATIC

by GITANANDA BRAHMACHARI **Re. 1**

1. கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம். ஆ மா. ஸ்ரீ. இராகவன் B. A. L. T. ... 0 2 6
2. கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் ... 0 3 0
3. கோபால் புதிய தமிழ் வாசக மூன்றும் புஸ்தகம் ... 0 4 0
4. கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் ... 0 4 6
5. கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் ... 0 6 0
6. ஆஞ்சநேயர்—ம. குப்புசாமி முதலியார் ... 0 5 0
7. சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரிநாதர் ... 0 5 0
8. கப்பர் அல்லது கவியரசு - ஆ. நா. கன்னையா ... 0 5 0
9. தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை கா.ரா. கோவிந்தராஜ முதலியார் 0 4 0
10. சிறுவர் இந்து தேச சரித்திரம் வி. ஜயராம ஐயர் ... 0 5 0
11. வில்லிக்ஸ் துரைத்தனவிளக்கம் 1-பாகம் 4-வகுப்புக்குரியது—S சுப்பிர மணிய ஐயர் ... 0 5 0
12. ஷை இரண்டாம் பாகம் 5-வது வகுப்புக்குரியது ... 0 6 0
13. கோபால் வாய்ப்பாடு ... 0 1 6
14. சூரவாதித்த சோழன், R. சாம்பசிவ சர்மா ... 0 12 0
15. புத்திமானே பலவான் ஏ. பரசுராமையர் ... 0 10 0
16. கிருஷ்ணதேவராயர் - கே.பி சேஷாத்திரி ஐயங்கார் ... 0 8 0
17. பகீரதன், ஆ. நா. கன்னையா ... 0 6 0
18. பத்திராயு அல்லது ஆட்சிக் குரியோன்-மே. வீ. வேணு கோபால பிள்ளை ... 0 6 0
19. இலங்கேசன்—S. சீனிவாசையர் ... 0 6 0
20. **English Selection for Higher Forms.** illustrated Revised Edition **Re 1.**
21. **TheNew Era Story Books Series,** Book I by C. Gordon, B. Ed. **As. 3.**
22. Book II ,, **As. 4.**
23. Book III ,, **As. 5.**
24. **Nanda the Paraiah Saint** by C. S. Rangaswami Aiyangar B. A., L. T. **As. 3.**
25. **Fables from Mahabharata** by N. Paramasivam Iyer B. A., L. T. **As. 3.**
26. **Chandrahasa** Revised by Prof. J. C. Rollo. M. A. **As. 6.**
27. **The Clay Cart** (In the press) **As. 6.**

(V. P. Charges, Extra of the Prices.)

B. G. PAUL & Co., FRANCIS JOSEPH STREET, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)